REGISTERED AT THE G. P. O. AS A NEWSPAPER

# ஈழகேசரி

தேசிய வார வெளியீடு

மலர் 16 | சுன்னாகம் — விய — சித்திரை கூ, 21-4-'46 — ஞாயிறு | இதழ் 37

JAFFNA COLLEGE LIBRARY MAY 20 1946 CEYLON

# புத்தாண்டும் புதுவாழ்வும்

## தொழிலாளர் வேலைநிறுத்தம்

[கொழும்புநிருபர் கடிதம்]

**புத்தாண்டு புதுவாழ்வுக்கு முற்குறி என்பது தமிழ் மக்கள் கருத்து. புது நம்பிக்கைகளையும் புத்தம் புதிய உணர்ச்சிகளையும் ஊட்டும் புது வருடம் பிறந்த போதும், மலர்ந்த முகங்களெல்லாம் போலிவிழந்தே காணப்படுகின்றன. சுதந்திர தேவியின் தாண்டவத்தைக் கண்டுகளிக்க முன்னர் நாடு பட்டினிப் பேய்க்குப் பலியாகி விடுமோவென அஞ்சவேண்டி யிருக்கின்றது?**

இருந்தும் எமது நாடு மூன்றரை மாத காலத்துக்குள் இரு புதுவருடத் திருநாட்களைக் கண்டுவிட்டது. ஏப்ரல் மாதம் பதின்மூன்றாந் திகதி பிற்பகலிற் பிறந்த புதுவருடம் சிங்களருக்குந் தமிழருக்கும் ஏற்றதொன்று. அத்துடன் முஸ்லிம் சகோதரர்களும் அதே தினத்தில் அகில இலங்கைச் சோனகர் சங்க மகாநாட்டை ஏற்படுத்தி மகிழ்வெய்தினர். தமிழ் வருடம் இலங்கையில் உள்ள இரு பெருஞ் சாகியத்தினருக்கும் இன்பத்தை யூட்டுவதுபோல் நாட்டின் விடுதலைக்கும் வழிகாட்டுமாகில் அதுவே ஒரு பெரும் பாக்கியமாகும்.

நாடு விடுதலை பெறுவதற்கு முன்னர் மக்களின் பொருளாதார நிலை சீர்பெற வேண்டும். சகல மக்களின் வாழ்க்கைத்தரமும் செம்மையுற்றாலன்றி நல் வாழ்க்கை ஏற்பட முடியாது. ஒரு சிலர் சுகபோக வாழ்வு அனுபவித்தால் மட்டும் போதாது. வாழ்க்கை வசதிகள் சகலருக்கும் கிடைக்கவேண்டும். அப்படியானால் நாட்டில் அமைதியும் மனத் திருப்தியும் நிலவுதற்கு ஏதுவாகும். ஏழை பணக்காரர் என்ற வித்தியாசம் இருக்கும்வரை சமூகத்தில் பொறாமை இருக்கத்தான் செய்யும். 'சுதந்திரம்' என்ற பேச்சு ஒருபுறமிருக்க மக்களின் வறுமையே முக்கிய பிரச்சினையாக விருக்கின்றது. இதைச் சமாளித்து மக்களின் உள்ளங்களைக் குளிரச் செய்த பின்னர்தான் ஸோல்பெரித் திட்டத்தின் அருமை பெருமைகளை ஆராய்ந்து அனுபவிக்கலாம்!

ஒரு நாட்டின் செல்வம் அந்நாட்டின் மக்களேயாவர். மக்களின் சமூக பொருளாதார அமைப்பு பலமற்ற வகையில் ஆடி அசைந்து கொண்டிருக்குமாகில் அந்நாடு தலை நிமிர்ந்து நிற்கமுடியாது. ஆகவே வெம்மைப் பூசல்கள் அனைத்தையும் போக்கி நாட்டின் சமூகப் பொருளாதார அமைப்பில் வளர்ச்சிக்கான மாறுதல்கள் செய்வது அவசியமாகின்றது. பயனற்ற பேச்சுக்களும் அதிர்ச்சி யூட்டும் நிகழ்ச்சிகளும் நாட்டுக்கு நலன் விளைக்கமாட்டா. அரசியல் விடுதலை எவ்வளவு அவசியமோ அவ்வளவுக்கு சமுதாய விடுதலையும் இன்றியமையாதது. ஆகவே, இப்புதிய வருஷம் பொதுவாகச் சிங்களருக்குஞ் சிறப்பாகத் தமிழருக்கும் அதிகமான பொறுப்பைச் சுமத்தியிருக்கின்றது. இவ்வாண்டில் வீண் கலவரங்களுக்கு இடங்கொடாமல் பொருளாதார விடுதலைக்கு வழிவகைகள் தேடுவதிலே கண்ணுங் கருத்துமாக வேண்டுமெனக் கூறினால் அது மிகையாகாது.

### புறக்கோட்டையில் அமைதி

பொதுவாகப் புறக்கோட்டைப் பக்கம் எப்போதுஞ் சந்தடியுஞ் சந்தடியுமாகவேயிருக்கும். ஆனால் இம்முறை வழக்கத்துக்கு மாறாக இங்கு அமைதி நிலவியிருந்தது. ஆனால் புடவைக் கடைகளுக்கு முன்னால் கூட்டம் அதிகமாக விருந்தது உண்மை.

கடந்த வருடங்களிற் கூடப் புடவை விஷயத்தில் இம்மாதிரியான ஏமாற்றம் நிகழவில்லை. புடவைக் கூப்பன்களைச் சிக்காராக வைத்துக்கொண்டு கடைகளுக்குச் சென்றவர்களைப் பார்த்துக் கடைக்காரர் கைகளை விரித்தனர். ஒரு கடையில் ஆகக் கூடி ஐம்பது யார் இங்கிலிஷ் துணியிருந்தது. இதைப் பங்கு பெற முன்னூற்றுக்கு அதிகமானோர் கடையை முற்றுக்கையிட்டனர். முதலாளிக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை. பின்னர் கூட்டத்தின் விருப்பப்படி லொத்தர் போடப்பட்டது. அதிர்ஷ்டசாலிகள் தலைக்கு மூன்று யார் அடித்துக்கொண்டு வீடு சென்றனர்!

புடவைத் தட்டுப்பாடு உச்ச நிலையை அடைந்த போதிலும் ஏதோ பட்சண வகைகளுக்குப் பஞ்சமேற்படவில்லை. புது வருடப்பிறப்பை யோசித்தோ என்னவோ அநேக வீடுகளில் சுவையான உணவு கிடைத்தது. பெண்மணிகள் ஏற்கனவே மிச்சம் பிடித்துப் புதுவருடப் பட்சணங்கள் செய்து விருந்தினர்க்குத் தாராளமாகப் பரிமாறினர். இது வெள்ளவத்தைப் பக்கச் செய்தி. சிங்களரின் கொண்டாட்டத்தைப் பற்றிச் சொல்ல வேண்டியதில்லை. 'கிரிபத்' (பாற்சோறு) முதல் அற்புதமான 'அல்வா' வரை சகல உணவு வகைகளும் விருந்தினருக்கு உதவி உபசரித்தார்கள். சங்கீதம் இசைத்து மகிழ்ந்தனர். தமிழர் சிங்களர் என்ற பேதமில்லாமற் சகலரும் கொண்டாடி மகிழ்ந்த புத்தாண்டின் மறு வருகையை ஆவலுடன் எதிர்பார்ப்போமாக.

### அரிசிச் செய்தி

புது வருடப்பிறப்புக்கு மறுநாட் காலை கண்களைக் கசக்கிக் கொண்டு சாளரத்தின் அருகே கிடந்த ஒப்சேவர் பத்திரிகையை எடுத்துப் படித்ததும் ஏற்பட்ட மகிழ்ச்சிக்கு அளவில்லை. ஏப்ரல் 29-ந் திகதி தொடக்கம் பிரதிவாரமும் ஒன்றரைக்கொத்து அரிசி கொடுக்கப்படலாம் என்று அதிற் கொட்டை எழுத்துக்களில் விளாசப்பட்டிருந்தது. சேர் குணத்திலகா லண்டன் மாநகரிலும் உவாஷிங்டனிலும் நிகழ்த்திய சம்பாஷணைகளின் விளைவாக அரிசிப் பங்கீடு விஷயத்தில் இந்த அதிகரிப்பு ஏற்படவிருப்பதாகத் தெரிகின்றது. அரிசிக் கப்பல் இம்மாதம் 29-ந் திகதி இலங்கையை வந்தடையு மென அரசாங்கம் எதிர்பார்க்கின்றது.

அரிசிப் பங்கீடு அளவு அதிகரிக்கப்போவதை யறிந்து குதூகலித்துக் கொண்டிருக்கையில் அடுத்தநாட் திங்கட்கிழமை (15-4-46) வெளிவந்த டைம்ஸ் பத்திரிகை உள்ளத்தைக் கலங்கச் செய்தது. "ஆறு தினங்களுக்குத் தக்க அரிசிதான் இப்போது இருக்கின்றது. நிலைமையோ மகா மோசம். அரிசிக் கப்பல் ஒன்று துறைமுகத்தையடைந்த விடத்தும் ஆறு நாட்களுக்குப் போதிய அரிசிதான் இப்போது உண்டு," என அப்பத்திரிகை பயமுறுத்தியது. சேர் குணத்திலகாவின் யாத்திரை அவ்வளவு தூரம் வெற்றி யுற்றிருக்கின்றதென்பதை விரைவில் அறிந்துவிடலாம்.

### சிங்கப்பூர் மகாநாடு

சிங்கப்பூரில் நிகழும் உணவு மகாநாட்டுக்கு இலங்கையின் பிரதிநிதிகளாகத் தேசாதிபதியும் ஸ்ரீ சேனநாயகாவும் வாயுவேகத்திற் சென்றிருக்கின்றனர். இத்தூதுக்கோஷ்டிக்குத் தேசாதிபதிதான் தலைவர். இம் மகாநாடு வெற்றியுற வேண்டுமென்பது ஆசியாவில் வதியும் மக்களின் பிரார்த்தனை. உவாஷிங்டனில் நிகழ்ந்த மகாநாடு ஒவ்வொரு தேசத்துக்கும் குறித்தளவு உணவுப் பொருட்களை ஒதுக்கியிருக்கின்றது. இவற்றை ஏற்றுமதி இறக்குமதி செய்வதற்கான ஒழுங்குகளைப்பற்றி ஆலோசனை செய்யவே சிங்கப்பூர் உணவு மகாநாடு கூடியிருக்கின்றது. உலகில் நிலவும் உணவு நெருக்கடி இன்னும் மூன்றுமாத காலத்துக்குள்ளே தீர்ந்து விடுமென அமெரிக்க ஜனாதிபதி ட்ரூமன் நம்புகின்றார்.

### மீண்டும் வேலைநிறுத்தம்

கொழும்புத் துறைமுகத் தொழிலாளர்கள் வேலை நிறுத்தங் காரணமாக நாட்டில் அரிசித் தட்டுப்பாடு அதிகரிக்கப் போகின்றது. நாற்பதுக்கு மேலான கோரிக்கைகளை இத்தொழிலாளர் விடுத்திருக்கின்றனர். இவற்றுள் பெரும்பாலான சலுகைகள் ஏற்கனவே இவர்களுக்கு உதவப்பட்டிருப்பதாகத் தெரிகின்றது. தற்போது இவர்களுக்கு பதினைந்து நாள் முழுச்சம்பள லீவு உண்டு. இவற்றுடன் மேலதிகமாகப் பதினைந்து நாள் முழுச் சம்பள லீவு வேண்டுமென நிற்கின்றனர். துறைமுகத்தில் வசிப்பதற்கு வீடுகளும் உடைகளும் வாரம் ஒன்றுக்கு 45 மணி நேர வேலையுங் கொடுக்கப்பட வேண்டுமென இவர்கள் கோருகின்றனர்.

வேலை நிறுத்தத்தின் விளைவாக உணவுப் பொருள்களுடன் வந்து நிற்குங் கப்பல்கள் இறக்குமதி செய்யப்படாமல் துறைமுகத்தில் நிற்கின்றன. தொழிலாளர்களின் கோரிக்கைகளுக்கு இணங்குவதாகில் கப்பல்களுக்குக் கரியேற்றுங் கட்டணம் உயர்த்தப்படவேண்டும். அப்படியானாற் கப்பல்கள் கொழும்புப் பக்கம் வாராமல் இந்தியத் துறைமுகங்களைச் சென்றடையும்.

தொழிலாளர் வேலைக்குத் திரும்பாத காரணத்தால் வெளிக்கடைச் சிறையில் வதியும் இருநூற்றுக்கு அதிகமான மறியற்காரர்களின் உதவியுடன் கப்பல்களுக்குக் கரியேற்றப்பட்டது.

### பல்கலைக்கழகம்

இலங்கைப் பல்கலைக்கழகத்தில் ஜூலை மாதத்துடன் தமிழில்

# காலங்கண்ட தமிழ்மொழி

வித்வான் பரீட்சை நடத்தத் திட்டம் போடப்பட்டிருக்கின்றது. சிங்களத்தில் நடத்தவிருக்கும் பரீட்சை வித்தியா விசாரதா என்ற பெயரால் வழங்கப்படும். அநேகர் மூன்று வருடகாலத்துக்குள் தொடர்ந்து படிக்க முடியாத காரணத்தால் பிரதிவருடம் பரீட்சைகள் நடத்துவதுடன் அதற்குரித்தான பத்திரங்களும் அளிக்கப்படும். மூன்றும் வருடத்துப் பரீட்சை ஆங்கில பி. ஏ. சோதனையை ஒத்ததாக விருக்குமெனத் தெரிகின்றது.

### தமிழுக்கு விடுதலை

பல்கலைக்கழகத்து வித்வான் பரீட்சையைப் பற்றிப் பேசும்போது பி. ஸ்ரீ அவர்கள் சென்னைப் பத்திரிகை ஒன்றில் எழுதியிருக்கும் விஷயத்தைப் பற்றிக் குறிப்பிடாமல் இருக்கமுடியவில்லை. அவர் எழுதுவதாவது: "தமிழர்களுக்குப் பரிபூரண விடுதலை கிடைக்கவேண்டுமென்றால் தமிழுக்கும் விடுதலை கிடைக்க வேண்டும். நாட்டிலே பல்கலைக் கழகத்திலும், வெளியிலும் ஆங்கிலமே ராஜ பாஷையாக அதிகாரஞ் செலுத்தி வருகின்றது. தாய்மொழியாகிய தமிழ் அடிமைபோல் ஒதுங்கி நிற்கிறது. இதனாலேயே நமது கல்வியறிவு உதிரத்திலே கலந்துவிடவில்லை. உள்ளத்திலே ஊறிப்போகவில்லை. படித்த வகுப்பார் நாட்டிலேயே அன்னியர்களாகி விட்டார்கள்! ............இன்னும் நமது கலாசாலைகளும் பல்கலைக் கழகங்களும் தாய்மொழி மூலம் அறிவுப்பணி புரிய முன்வராதது வருந்தத்தக்கதே.

"இன்றைய உலகத்தோடு கலந்து உறவாட ஆங்கிலம் முதலிய மேலைநாட்டு மொழிகளையும் கற்போம். ஆனால் அவையே மேலான மொழிகள் என்றாவது, மேன்மக்களின் மொழிகள் என்றாவது ஒப்புக்கொள்ளமாட்டோம். தமிழருள்ளம் தமிழிலே மலர்ச்சி பெற்றுக் கனியும்படி நம் தாய் மொழியை வளர்த்துக்கொண்டே போவோம்-

"தமிழுக்கு விடுதலை என்றால் தமிழ்ப் பண்டிதர்களிடமிருந்து தமிழ் விடுதலை பெறவேண்டும். ...........சங்க காலத்துத் தமிழ் நடையை இந்நாளிலுங் கைக்கொள்வது தவறு. வழக்கிழந்த பழஞ்சொற்களைத் தயை தாக்ஷண்யம் இல்லாமல் வாழ்விழந்த பழந் தெய்வங்களைப்போல் ஒதுக்கிவிட வேண்டும்.........சங்க காலத்துத் தமிழ்தான் செந்தமிழ் என்றால் அது சென்ற தமிழ்தான்! அந்த நூல்களை ஆராய்ந்து வெளியிடும் போதும் இக்காலத் தமிழிலே தான் முன்னுரை, விளக்கங்கள் எழுதப்பட வேண்டும்.

"பல நூற்றாண்டுகளாக வளர்ந்து வந்திருக்கும் நம் தமிழ் இலக்கியமே காலத்துக்கு ஏற்ற நிலையில் தமிழுக்கு விடுதலை அவசியம் என்பதையும் வற்புறுத்துகிறது. கம்பன் தமிழ் சங்க காலத்தமிழ் அன்று. ஆழ்வார் நாயன்மார்களின் தமிழ் இன்றைய தமிழர்களுக்கும் ஒருவாறு விளங்கக் கூடிய தமிழ். ராமலிங்கசுவாமிகளின் தமிழும் பாரதியார் தமிழும் இன்றைய தமிழ்.

"இன்றைய தமிழ் இலக்கியம் பொதுஜனங்களுக் கிடையே ஒரு புதுவாழ்வு—இயக்கத்தைத் தோற்றுவிக்கப் பயன்படவேண்டும். அப்போதுதான் காலம் கண்ட தமிழ்நாடு புதுவாழ்வு பெற்று உலகத்திற்கே ஒரு புதுமையாகவும் விளங்கக்கூடும்."

# சைவமுந் தமிழுந் திகழ் நாடு

## யாழ்ப்பாணத்தில் திருப்புகழ்மணி

யாழ்ப்பாணம், ஏப்ரல் 19

**"யாழ்ப்பாணத்திலே சைவமுந் தமிழும் வளம் பெற்று வருவதைப் புத்தகங்கள் மூலமும் அன்பர்கள் வாயிலாகவும் அறிந்துவருகின்றேன். ஆகவே தமிழ் விளங்கும் யாழ்ப்பாணத்தைப் பார்த்துப் போகலாமென இங்குவந்துள்ளேன்."**

இவ்வாறு திருவாங்கூர் பிரதம நீதியரசர் திருப்புகழ்மணி கிருஷ்ணசாமி ஐயர் அவர்கள் யாழ்ப்பாணத்தில் அவருக்கு அளிக்கப்பட்ட வரவேற்புக் கூட்டத்திற் குறிப்பிட்டார்.

கடந்த வெள்ளிக்கிழமை காலை திருப்புகழ்மணி அவர்கள் புகைரத மார்க்கமாக யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தார். கொழும்பிலிருந்து அவருடன் ஸ்ரீ கனகரத்தினமவர்களும் வேறும் பல அன்பர்களும் வந்திருந்தனர். மாகாண அதிபர் ஸ்ரீ. குமாரசுவாமி அவர்கள் உட்பட யாழ்ப்பாணத்துப் பிரமுகர்கள் பலர் திருவாங்கூர் பிரதம நீதியரசரை புகைரதஸ்தானத்தில் மலர்மாலைகள்சூட்டிவரவேற்றனர்.

பின்னர் காலை $9\frac{1}{2}$ மணியளவில் திருப்புகழ்மணியவர்கள் வாடி வீட்டிலிருந்து மேளவாத்தியத்துடன் யாழ்ப்பாணம் நகரமண்டபத்துக்கு அழைத்துச்செல்லப்பட்டார். பல பாகங்களிலிருந்தும் ஏராளமான ஜனங்கள் திருப்புகழ் மணியவர்களை நேரிற் காண்பதற்கும் அவருடைய இனிமையான சங்கீதப் பிரசங்கத்தைக் கேட்டு அனுபவிக்கவும் வந்திருந்தனர். மாகாண அதிபர் ஸ்ரீ குமாரசுவாமி அவர்களின் தலைமையில்வரவேற்பு வைபவம் நிகழ்ந்தது. யாழ்ப்பாணத்துக்கு நாவலர் பெருமான் செய்த தொண்டுகளையும், அவர் மக்களுக்கு ஊட்டி வைத்த சமய உணர்ச்சியையும் நினைவூட்டித் தமிழ் மணங்கமழும் யாழ்ப்பாணத்துக்குத் திருப்புகழ்மணியவர்களை மகிழ்ச்சியுடன் வரவேற்பதாகக் ஸ்ரீ குமாரசுவாமி குறிப்பிட்டார். பின்னர் இலங்கைக் கணக்குப் பரிசோதனைப் பகுதித் தலைவர் ஸ்ரீ கனகரத்தினம் தமக்கும் நீதியரசருக்கும் ஏற்பட்ட தொடர்பை விளக்கி அப்பெரியாரின் கடவுள் பக்தியையும் தமிழ்ப் பற்றையும் எடுத்துக் கூறினார்.

மிகுந்த கரகோஷத்துக்கிடையே பிரதம நீதிபதியரசர் எழுந்து பேசியதாவது:

"திருப்புகழின் பெருமை பற்றித் தமிழ் மக்கள் வாழும் யாழ்ப்பாணத்துக்கு நான் வந்துபேச வேண்டுமென ஒருபோதும் எண்ணியிருக்கவில்லை. தமிழ் விளங்கும் யாழ்ப்பாணத்தைத் தரிசிக்கவே நாங்கள் வந்தோம். திருப்புகழின் மகத்துவம் சொல்லில் அடங்காது. இதய அமைவைப் பெற விரும்புவர்கள் திருப்புகழைப் பாடிப்பயன் பெறவேண்டும். அடியார்களின் உள்ளங்களிற் பகவானைக் காணமுடியுமல்லவா? நீங்கள் அனைவரும் அடியார்கள் போல் எனக்குத் தோன்றுகின்றீர்கள். சிவத்தின் அன்பையும், அன்பின் ஜோதியையும் அதன் கருணையையும் நாம் பெறுவது அவசியம்.

உலகத்தில் நிகழ்ந்த அநேக கொடூரங்கள் கரையேறியிருப்பதைப் பார்த்தோம். இந்த இலங்கைத் தீவிற் கால்வைத்த நாள் முதல் நான் அன்பர்கள் அனேகரின் அன்புக்குப் பாத்திரமாகி விட்டேன். இதற்கு உத்தரமாகப் பாடுந் திருப்புகழுடன் இரண்டு கூடப் பாடிவிடலாம். நீங்கள் அளிக்கும் இந்த வரவேற்பை மனப்பூர்வத்துடன் ஏற்றுக் குமரக் கடவுளுக்குத் துதி செலுத்துகின்றேன்".

இதன்பின்னர் திருப்புகழ்மணி இனிய சங்கீதப் பிரசங்கம் செய்தார். அருணகிரிநாதரின் திருப்பாடல்களை பக்தியுடன் அற்புதமாகப் பாடுகின்றார். யாழ்ப்பாணத்தில் 23-ந் திகதி வரை தங்கி நிற்பார். அந்த நாட்களிற் பல இடங்களிலும் பிரசங்கங்கள் செய்வார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கர்ண பரம்பரை

● கொண்டோடி ☼

● தமிழர்களின் புத்தாண்டு பிறந்தது; வாழ்த்துச் செய்திகள் குவிந்தன; கைவிசேடங்களும் பரிமாறப்பட்டன

☼ இவ்வளவுந்தானா என்று பலர் ஆச்சரியப்படவுங்கூடும்.

☼ பின் இந்த யுத்தகாலத்தில் கோடியுடுப்பதா? விருந்துண்பதா? குசலம் விசாரிப்பதா? கும்மாளம் அடிப்பதா? எது தான் முடியும்.

☼ புண்ணியஞ் செய்தால்தான் கடவுள் படியளப்பாரென்று நாடோடியாகப் பேசுவதுண்டு.

☼ இப்பொழுதோ கூடுதலாகப் யாவஞ்செய்யத் துணிபவர்க்கே கூடுதலான படியும் அளக்கப்படுகின்றதாம்.

☼ இதனை ஏழைமக்கள் தான் பிரத்தியட்சமாகக் கண்டு சகிக்கின்றனராம்.

● இப்படியாகத்தான் சகல காரியங்களிலும் தலைகீழாக உலகம் புரண்டோடுகின்றதாம்.

☼ புரண்டோடும் இவ்வுலகத்தில் வசிப்பவர்களிற் பெரும்பாலானவர்கள் தலைதடுமாறியும் திரிகின்றார்களாம்.

☼ இவர்களுள் மக்களின் இன்னலை ஒழிக்க முன்வந்த தலைவர்கள்தான் முதல் வரிசையில் நிற்கின்றார்களாம்.

☼ 'ஆர்குடி கெட்டாலும் நீர் குடி மிளகுசாறு' என்ற சித்தாந்தமே இவர்களது மணிபோன்ற கொள்கையாகும்.

☼ இக் கொள்கையில் அணுவளவேனும் பிசகாது கடைப்பிடிப்பவர்களுள் இன்னொரு சாராரும் இருக்கின்றனராம்.

● இவர்களதான் இருட்டுச் சந்தை வியாபாரிகளாம்.

☼ வியாபாரிகள் என்றதும் சில்லறைக் கடைக்காரர்களென்று எண்ணக்கூடாதாம்.

☼ ஒரேநாளில் லட்சக்கணக்காகக் கொள்ளையடிக்கும் பெரிய புள்ளிகளாம் இவர்கள்.

☼ இக்கொள்ளைக் கூட்டத்தாருடன் சில சங்கக் கடைகளின் உத்தியோகஸ்தர்களையும் சேர்த்துக்கொள்ளலாமாம்.

☼ இதுமாத்திரமா! கட்டுப்பாட்டுப் பரிசோதகர்கள் என்ற சில ஆஷாடபூதிகள் கண்ணை மூடிக்கொண்டு 'அடிக்கும் அடி' யென்றாற் கணக்கிலடங்காதாம்.

☼ அரைவயிற்றுடன் முழு நாளும் வியர்வை சிந்த உழைத்த ஏழையின் பணம் எத்தனை பேரை நிரப்புகின்றது!

● களவெடுப்பது மிகமிகப் பாதகமான செயலாம்.

☼ களவெடுத்துப் பொய் சொல்லாதிருந்துவிட்டால் அப் பாதகம் ஓரளவு நிவிர்த்தியாகிவிடுமாம்.

☼ இதனை ஒட்டிப்போலும் அரசாங்க அலுவலகங்களிலும் ஒரு புது மொழியை உபயோகிக்கின்றார்களாம்.

☼ 'களவெடு பிடிபடாதே' என்பதுதான் இந்தப் புதுமொழி வாக்கியம்.

☼ இந்த வாக்கியத்தைத்தான் உத்தியோகத்தர்களும் அட்சரசுத்தியோடு உச்சாடனம் பண்ணுகின்றார்களாம்.

☼ இதனால்தான் கைலஞ்சப் பிசாசு எவர்கள் கையிலும் சிக்கிக்கொள்ளாது எப்பொழுதும் யதேச்சாதிகாரம் நடத்திவருகிறதாம்.

● கைலஞ்சப் பிசாசு மிகுதியும் உலாவிவரும் இடம் பொலீஸ்பகுதி போன்ற வட்டாரங்களில்தானும்.

☼ இதனைப் பொலீஸ் பகுதி உத்தியோகத்தரே வெளிப்படையாகக்கூறியும்வருகின்றார்களாம்

☼ இந்தப் பிசாசை வசியஞ் செய்து கொள்ளாது விட்டால் இவர்கள் நடைப்பிணங்களாகவே மாறிவந்துவிட நேரிடுமாம்.

☼ இத்தனைக்குங் காரணமாக நிற்பது இவர்கள் பெறும் அற்ப சம்பளமாம்.

☼ 'பொலீஸ் கொம்மிஷன்' விசாரணையின்போது வெளிவந்த பல 'குட்டு'களில் இதுவுமொன்றாம்.

● சம்பளமும் உயர்ந்துவிட்டாற் கைலஞ்சமும் ஒளிந்துவிடும் என்று அரசாங்கமும் கருதக்கூடுமாம்.

☼ அரசாங்கஊழியர்களின்சம்பளஉயர்ச்சி விசாரணைச்சபையினரும் தமது அறிக்கையை இப்பொழுது வெளிப்படுத்தியுள்ளார்களாம்.

☼ பொதுவாக எல்லா ஊழியர்களுக்கும் திருப்திகரமானஉயர்ச்சியைச் செய்துளளார்களாம்.

☼ ஆனால் ஆசிரியர்களுள், சுயபாஷா ஆசிரியர்களுக்கு மாத்திரம் போதிய திருப்தியேற்படவில்லையாம்.

☼ இது காரணமாக இவர்களும் 'வேலை நிறுத்தஞ்' செய்யத் துணிவார்களோ என்று பள்ளிமாணவர் பயப்படுகின்றார்களாம்.

☼ ஒருவேளை இவ்வாசிரியர்கள் இத்தொழிலே வேண்டாமப்பா என்று வேறு தொழிலை நாடவுங் கூடுமாம்.

☼ இப்பொழுதே, ஆசிரிய பயிற்சிச் (சிங்களம்)சோதனையில் முதன்மையாகச் சித்தியடைந்த இருவர் பஸ் 'இன்ஸ்பெக்டர்' களாகச் சேர்ந்துள்ளார்களாம்.

☼ காரணம்: இந்த 'இன்ஸ்பெக்டர்' வேலைக்குச் சம்பளம் ஆக ரூபா 112-50 தானும்.

☼ ஒரு ஆசிரியருக்கு ஆரம்ப சம்பளம் இப்போது ரூபா நாற்பத்துமூன்றும்.

---

### குருநாக்கல் சைவமகாசபை
### 16-ம் ஆண்டு நிறைவுவிழா

நிகழும் பங்குனி மாதம் 14-ம் திகதி (31-3-46) ஞாயிற்றுக் கிழமை பகல், மேற்படி சபையின் 16-ம் ஆண்டு நிறைவுவிழாக் கொண்டாட்டம் சபை மண்டபத்தில் நடந்தேறியது.

காலை 9-30 மணியளவில் திரு. த. சின்னையா அவர்கள் தலைமையில் நிகழ்ந்த காரியஸ்தர் கூட்டத்திற் சபையின் உத்தியோகஸ்தர் தெரிவு செய்யப்பட்டனர்.

அன்று பிற்பகல் ஓர் இனிய இசை விருந்தும் அளிக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து சபையின் போஷகர் திரு. தம்பிராசா அவர்கள் தலைமையில், நெஞ்சு விடுதூது என்னும் பொருள்பற்றி விபுலானந்த அடிகள் ஓர் அரிய சொற்பொழிவாற்றினார் சைவ சித்தாந்த. பொக்கிஷங்களாகிய பதினான்கு நூல்களுள் ஒன்றாகச் சிறப்புறுகின்றதும் சித்தாந்தப் பழங்களுளொருவராகிய உமாபதி சிவாச்சாரியார் உவந்தும் உள்ளம் கனிந்தும் பாடிய இந்நெஞ்சு விடு தூதினையும், இதன் உட்பொருளையும் கேட்போர் மகிழ இனி தெடுத்துக் காட்டினர். மறைஞான சம்பந்தராகிய தமது குருவினிடம் கொன்றையந்தாரினை மன்றாடிப்பெற்றுச்சூடிவரத் தன் வெள்ளையுள்ளத்தைத் தூதுபோக விட்ட அழகு உள்ள உள்ளப் பேரின்பம் தெவிட்டா நிற்கின்றது. அவர் தம் வழிபடு தெய்வமாகிய குருவினிடத்தில் முழு முதற் கடவுளைக் கண்டமையும், தூது விடுத்தமையும், குருவழிபாட்டு முறையை நன்கு விளக்குகின்றது.

இன்னும் இதுபோன்ற நூல்கள் மூலம் சைவசித்தாந்தப் பழம் பொருளைக் கற்றுணரும்படியும் அடிகள் உற்சாகமளித்துச் சொற்பொழிவை முடித்தனர். அப்பொழுது திருவாவடுதுறை ஆதீனத்தார் தம்மையே சைவ சித்தாந்த தத்துவத்தைத் தமிழறியாப் பிறரும் அறியும் வண்ணம் ஆங்கிலத்தில் எழுதித் தரும்படி வேண்டிக்கொண்டதாகவும் தாம் அதை உவந்தேற்றுக் கொண்டதாகவுங் கூறினர்.

### திருப்புகழ்மணி திருகோணமலை விஜயம்

திருவாங்கூர் சமஸ்தான பிரதம நீதிபதி திருப்புகழ்மணி T. M. கிருஷ்ணசாமி ஐயர் அவர்கள் 'திருப்புகழ் மகிமை' என்னும் பொருள்பற்றி, திருகோணமலை இந்துக்கல்லூரி மண்டபத்தில் இம்மாதம் 24-4-46 புதன் கிழமை பிற்பகல் 5 மணியளவில், திருகோணமலை இந்து வாலிப சங்க ஆதரவில் பேச்சு நிகழ்த்துவார்கள்.

—கடிதம்


## புகையிலைப் பயிர் செய்வோர்க்கு — ஓர் விசேஷ அறிவித்தல்

# புகையிலை

## கொழும்பு கொம்மேர்ஷல் கம்பெனியார்

அநேக வருஷங்களாக எல்லாப் பயிர்களுக்கும் வேண்டிய பசளைவகைகளை விநியோகஞ் செய்பவர்களாக இருந்து வருகிறார்கள்.

புகையிலைப் பயிர்ச் செய்கைக்கு அவசியமான பசளைகளைப்பற்றி விசேஷமாக அறிந்தவர்கள்

# C. C. C.

பிரத்தியேக புகையிலைப் பசளைக் கலப்புகளை உபயோகிப்பதாலேயே சிறந்த செழிப்பையும் மிக உயர்ந்தலாபத்தையும் — பெறமுடியும்

விசேஷ ஆலோசனை இலவசமாகக் கூறப்படும். எங்கள் விசேஷ விற்பனை ஒழுங்குகளைப்பற்றிய விபரங்களுக்கு உடனே எழுதவும்

## கொழும்பு கொம்மேர்ஷல் கம்பெனி லிமிற்றெட்

(பெரிய பிரித்தானியாவில் சமுதாயமாக்கப்பட்டது)
(அங்கத்தவர்களின் உத்தரவாதம் மட்டுப்படுத்தப்பட்டது)

## COLOMBO COMMERCIAL CO., LTD.

Incorporated in Great Britain.
Liability of Members Ltd.

[2076]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலக்கிய அரங்கம்

# இராம இராச்சியம்

சமீபத்தில் திருச்சி ரேடியோ நிலையத்திற் கூடிய இலக்கிய அரங்கில் இராம இராச்சியம் பற்றிச் சொற்பொழிவுகள் நிகழ்ந்தன. திருப்புகழ்மணி டி. எம். கிருஷ்ணசாமிஐயர் தலைமை வகித்தார். இதிற் பங்குபற்றிய அறிஞரின் பேச்சுக்கள் அனைத்தும் வானொலியில் வெளியிடப்பட்டிருக்கின்றன. அவற்றை ஈழகேசரி வாசகர்களும் படித்து இன்புறுவார்களாக. —ப. ர்.

## தலைவர் முன்னுரை

இராமராஜ்யம் என்பது ஓர் குறைவற்ற ராஜரீக நிலை. மனோநிலையென்றும் சொல்லலாம். ராமநாம ஜெபத்தால் உள்ளம் பரிசுத்தியாய் சமரச அன்பின் வெள்ளத்தால் உலகம் கொண்ட ஜீவராசிகளிடம் அன்பு ஏற்பட்டு எங்கும் ஈசன் என்று கருதும் ஞானிகள் ராமராஜ்யத்தை தமதுள்ளே கண்டனர். வெளியே அந்த ராஜ்யம் இருக்குமானல் அது எப்படி இருக்கும். அரசன் ஒவ்வொரு உயிரையும் தன்னுயிர்போல் கருதுவான். ஒவ்வொரு குடியும் அரசன் உடம்பை தன்னுடம்புபோல் கருதுவார்கள். 'உயிரெலாம் தன்னுயிர் ஒப்ப ஓம்பலால் உயிரெலாம் உறைவதோர் உடம்புமாயினன்' என்றார் கம்பர். ராஜரீகத் திட்டக்கலை வழியாய்ப் பார்க்குங்கால் இது என்ன அரசு? குடி அரசா? (Democracy) அதுவும் தான். ஆனல் அதற்கு மேல் குடிகள் உயிர், அரசன் அவை தங்கும் உடம்பு. அரசனும் குடிகளும் தர்மத்தால் கட்டுப்பட்டவரானதால் தர்மத்தை நிலைநிறுத்தி வாழக் கருதும் ப்ரஜைகளுக்கும் அரசனுக்கும் முரண் கிடையாது. ஒற்றுமையேதான் Monarchy Aristocracy, Democracy என்று சொல்லப்பட்ட, ஏக ஆதிபத்யம், பிரபு ஜன ஆதிபத்யம், குடிஜன ஆதிபத்யம் இவை மூன்றும் ஒற்றுமைப்பட்ட இடம் தான் ராம ராஜ்யம். எங்கும் கேள்வி நிரம்பலால் கல்வி கற்றவர்கள், கல்லாதவர்கள் என்று வித்யாசம் கிடையாது. எல்லோரும் எல்லாப் பெருஞ் செல்வம் எய்தலால், பொருளிலா தரித்திரம் பூண்டவர்கள் கிடையாது. சண்டையில்லாததால் வெற்றி அடைந்தவர்களும் தோல்வியடைந்தவர்களும் கிடையாது. அவரவர்களுக்குத் தெய்வம் இட்ட தர்மத்தை அவ்ரவர் செய்து நிர்வகித்து அவரவர்கள் தெய்வத்தில் ஈடுபட்டு சமரஸ அநுபூதி அடைவதால் இகபர சாம்ராஜ்யத்தை ஏகபோகமாய் யாவரும் அடைந்து விளங்கப்பெறும் ராஜ்யத்தை கம்பர்கூறிவிட்டார். சொன்ன செய்யுள் தமிழ் நாட்டில் மேகம்போல அடர்ந்து ஆகாயத்தில் நிற்கின்றன. அந்த பாவங்களை இப்பொழுது மழைபோல் உலகின் கண் மற்றும் ஒரு தரம் விளக்குவார்கள். வெள்ளமெடுத்து விடுமென்ற பயம் வேண்டாம். ஒரு மணிக்குள் இந்த மழை நின்று விடும்.

## வளநாடு

### ஜி. சுப்ரமண்யபிள்ளை

ஓர் அரசன் செங்கோல் செலுத்துவதற்கு இன்றியமையாச் சிறப்பினை யுடையது நாடு. அது எவ்வாறு இருக்க வேண்டும் என்பதைப் பலரும் பலவாறு கனவு கண்டனர். கம்பநாடரும் ஒரு கனவு உலகத்தைக் கண்டமைத்தார் தமது மாபெரும் காப்பியத்தில். நாடென்ப நாடா வளத்தன என்பது பொய்யாமொழி. தன்கண் வாழ்வார் தேடி வருந்தாமல் அவர்பால் தானே யடையும் செல்வம் பொழிவது எதுவோ, அதுவே [illegible] என்று கூறப்படும். [illegible]வே வள நாடு. அதற்கு [illegible] மருத நிலம் வேண்[illegible] [illegible]கோசல நாட்டிலே கம்பர் கண்ட மருத நிலம் எப்படியிருந்தது?

"தண்டலை மயில்களாடத் தாமரை விளக்கம் தாங்கக் கொண்டல்கள் முழவின் ஏங்கக் குவளை கண் விழித்து நோக்கத் தெண்டிரை யெழினி காட்டத் தேம்பிழி மகர யாழின் வண்டுகள் இனிது பாட மருதம்வீற் றிருக்கும் மாதோ" என்று ஆடலும் பாடலும் அமைந்த இயற்கை அரங்கிலே மருதமாம் மங்கையைக் கொலு விருத்திக் கோலம் காண்கிறார் புலவர். எங்கும் இனிய பொழில்கள், நெடிய வயல்கள், அவ்வெண்ணரும் பெரு நாட்டிலே கனியும், கிழங்கும், தானியங்களும் கணக்கின்றிக் குவிந்தன. அந்நாட்டார் சுரங்கம் தொட்டனர், மணிகள் எடுத்தனர்; தரங்கக் கடலைத் தாண்டிச் சென்றனர். வாணிகம் பெருகிச் செல்வம் மலிந்தது. அயோத்தி நகரின் கடைவீதியோ கண்கொள்ளாக் காட்சி. அங்கு இல்லை யென்னும் பொருள் இல்லவே யில்லை, அத்திரு வீற்றிருக்கும் தீதுதீர் நியமத்தைக் கண்ட பின், குபேரன் பட்டணமும் குன்றிப்போய்விட்டதாம். அந்நகரின் "ஆவணங் கண்டபின் அளகை தோற்றதே" என்று கைகொட்டுகிறார் கம்பன்.

ஆனல், இயற்கை நலம் பெற்றால் மட்டும் ஒரு நாடு சிறப்படைந்து விடுமா? நாடோ, காடோ, மேடோ, பள்ளமோ, "எவ்வழி நல்லவர் ஆடவர் அவ்வழி நல்லை வாழிய நிலனே" என்பது ஔவையார் வாக்கு. ஒரு நாட்டிற்கு விளை நிலங்களுடன் தக்காரும் தாழ்விலாச் செல்வரும் வேண்டும் என்கிறார் வள்ளுவரும். தங்கள் குலத்தின் இழுக்காத நற்குண நற்செய்கைகளையுடையராய் மக்கள் ஒழுக்கம் சிறந்து விளங்கினால் தான் அவர் வாழும் நாடும் நல்ல நாடாகும். கோசல நாட்டில்,

கலம் சுரக்கும் நிதியம் கணக்கிலா
நிலம் சுரக்கும் நிறைவளம் நன்மணி
பிலம் சுரக்கும் பெறுதற்கரிய தம்
குலம் சுரக்கும்ஒழுக்கம் குடிக்கெலாம்

என்று கம்பர் அழகுற அமைத்துப் பாடுகிறார்.

இவ்வாறு ஒழுக்கத்தில் ஓங்கிய கோசல நாட்டு ஆடவரும் பெண்டிரும் கல்வி கேள்விகளிலும் சிறந்திருந்தனர். பன்னருங் கலைதெரி பட்டி மண்டபங்களிற் செவிநுகர் கனிகளை இனிது மாந்தினர். மயிலூர் கந்தனையனையார் நந்தனவனங்களில் வித்தைகள் பயின்றனர். சந்தன வனத்திலும் சண்பகக் காவிலும் சுந்தர வதனியர் பந்துகள் ஆடினர். இவ்விதம் கல்விச் செல்வமும் பொருட் செல்வமும் ஒன்று கூடினல் நாடு எவ்வாறு இருக்கும் என்பதைக் கம்பர் அமைத்த கவியுலகிலேதான் நாம் கண்டு தெரியவேண்டும்.

கல்லாது நிற்பார்
பிறரின்மையிற் கல்விமுற்ற
வல்லாரு மில்லை யவைவல்ல
ரல்லாரு மில்லை
யெல்லாரு மெல்லாப்
பெருஞ்செல்வமுமெய்தலாலே
யில்லாரு மில்லை
யுடையார்களுமில்லை மாதோ

என்றெழுதுகிறது கவியின் கனவு. அந்த நாட்டிலே எங்கு நுழையினும் விருந்தும் விழாவுமே பொலிந்துவிளக்குகின்றன.

இவ்வாறு செழிப்பும் செல்வமும் களிநடம் புரிந்த அக் கம்பர் நாட்டிலே வேண்டுவார் வேண்டிய யாவும் எளிதிற் கை கூடியதால் வறுமை என்பதை மாந்தர் கேட்டும் அறியார். வறுமை எங்கு இல்லையோ அங்கே பொய் சூது, களவுக்கும் இடமில்லை. விரும்பிக் கொடுப்பதை வாங்கவே அங்கு ஆளில்லை என்றால் வலிந்து பொருள் பறிக்கும் வழக்கம் ஏது? ஆதலால் காவலுக்கும் அவசியமில்லை. இதையே புலவர், "கள்வரிலாமைப் பொருட் காவலுமில்லை யாதுங் கொள்வரிலாமைக் கொடுப்பார்களுமில்லை மாதோ" என்று குறித்தார். இவ்வாறு வறுமையும் அற்று அதன் விளைவாகப் பொய்யும் களவும் பொய்த்து நீங்கவே சினம் என்றும் சேர்ந்தாரைக் கொல்லி, அம்மக்களைக் கனவிலும் வருத்தியறியாது, அவர்கள் மனம் செம்மையில் தோய்ந்து தூய்மையடைந்தது. ஆடவர் ஐம்பொறிகளை வென்றடக்கினர். மங்கைமார் தமது கண்ணம்புகளை நெறியிற் காத்தனர். மன நலமுடையார் உடல் நலம் பெறுதல் ஒரு தலையாகலின் பிணிவாய்ப்பட்டு இளமையிலேயே இறந்து படுதல் அந்நாட்டில் இல்லை. நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம். தலை மயிர் கொக்கக் கொக்க நரைத்துத் தளர்நிலையெய்தும் முதுமை வந்துற்ற பின்னரே, மரத்தி னின்றும் நழுவும் பழம்போல் முதியோர் மறைதல் அந்நாட்டின் இயல்பு. ஆதலால் அங்குக் கூற்றுவனுக்கே வேலையில்லை என்று கவியரசர் பாடுகிறார்:-

கூற்றமில்லை யோர்
குற்றமில் லாமையாற்
சீற்ற மில்லைதஞ்
சிந்தையிற் செம்மையால்
ஆற்றல் நல்லறம்
அல்லதி லாமையால்
ஏற்ற மன்றி இழித்தக வில்லையே.

எனவே செல்வம் கொழித்த அந்நாட்டு மக்களின் இன்ப வாழ்க்கை நல் அறத்தையே அடிப்படையாகக் கொண்டிருந்தது. பல் குழுவும் பாழ் செய்யும் உட்பகையும் அங்கில்லை.

அறம் என்றும் அழியாதது கோசல நாடு அறம் பயின்று சிறந்ததால் அதற்கு அழிவில்லை. ஆனல் அரக்கர் நாடாகிய இலங்கையிலே அறத்தைத் தவிர ஏனை வளங்கள் எல்லாம் இராவணன் ஆற்றிய அருந்தவத்தால் வலிந்து கைவரப் பெற்று அரக்கர் மனத்தைக் களிப்பூட்டின. அஞ்சனை குமரன் இலங்கையிற் கண்ட காட்சி.

மரமடங்கலும் கற்பகம்
மனையெல்லாம் கனகம்
அரமடந்தையர் சிலதியர்
அரக்கியர்க்கு அமரர்
உரமடங்க வந்துழையரா
யுழல்பவர் ஒருவர்
தரமடங்குவ தன்றிது
தவம்செய்த தவமால்

என்று சித்திரிக்கப்படுகிறது. அனுமனும் "களிக்கின்றாரலார் கவல்கின்றார் ஒருவரைக் காணேன்" என்று விம்மிதம் கொண்டான். ஆயினும் மாருதச் சுழலும் கதிரின் வெம்மையும் பெரும் புயலும், கூற்றுவன் பாசமும் நுழையாத அவ்வீரத்திரு நகருள் அழிவிலா அறமும் நுழைந்தறியாது என்று கூறி, ஆதலால் அவ்விலங்கை அழியும் என்பதைக் கம்பர் குறிப்பாக உணர்த்துகிறார்.

கறங்கு கால்புகா கார்புகா
கதிர்புகா மறலி
மறம் புகாதினி வானவர்
புகாரென்கை வம்பே
திறம் புகாலத்துள் யாவையுஞ்
சிதையினுஞ் சிதையா
அறம் புகாதிந்த வணிமதிட்
கிடக்கைநின் றகத்தின்

ஆகவே வளமுடைய நாட்டிலும் மக்கள் அறத்துடன் ஒழுகினல்தான் அந்நாடு சிறப்புறும் என்ப விளக்கமுறும்.

## கம்பர் கண்ட அரசன்

### மஹாமஹோபாத்யாய மு. கதிரேச செட்டியார்

கல்வியிற் பெரிய கம்பர் என்னும் புலவர் பெருமான் தாம் பாடிய பெருங்காப்பியமாகிய இராமாயணத்தில் அரசர் இயல்பைப் பற்றிக் கூறிய செய்திகள் இப்பொழுது சுருக்கிக் கூறப்படும். கம்பர் முதலிற் கண்ட அரசன் தசரதன் ஆவான். அவன் இயல்பு கூறுமுகமாக அரசன் இயல்பு விளக்கப்பட்டுள்ளது. அரசன் அறிவு, ஆண்மை, பெருமை என்னும் மூவகை ஆற்றலும் உடையனாய்த் தன் நலம் பேணாது குடிகளின் நலத்தையே பேணும் கருத்துடையன் ஆதல் வேண்டும். தன் ஆட்சியுட்பட்ட குடிகளுக்கு வரும் நலம் தீங்குகளெல்லாம் தனக்கு வந்தனவாகக்கொண்டு செங்கோல் செலுத்தி வாழ்தல் மிகவும் அரிதென்பர்.

தன்கீழ் வாழும் உயிர்களை எத்தகைய குறையுமின்றிப் பாதுகாத்தல் பற்றி,

"நெல்லும்உயிரன்றே நீரும்உயிரன்றே,
மன்னன்உயிர்த்தேமலர் தலைஉலகம்"

என்பர் பழம்புலவர் ஒருவர். இதனல் பிற உயிர்களை எல்லாம் உடலாகக் கொண்டு, அவ்வுடல்களை இயக்கும் உயிர் போல்வான் அரசன் என்பது தெளியப்படும். மன்னன் முறை செய்து காப்பாற்றுவானயின் நெல்லும் நீரும் உளவாம் என்பதுபற்றி இங்கே உயிராகக் கூறப்பட்டான். கம்பர் உயிர்க்கு உடலின் இன்றியமையாமை நோக்கியும் அவ்வுயிரைத் தாங்குதல் பற்றியும், தன்கீழ் வாழும் குடிகள் எல்லாம் உயிராகக் கொண்டு அரசன் உடல்போலப் பாதுகாப்பவன் ஆவான் என்னும் கருத்துத் தோன்ற

வயிரவான் பூணணி
மடங்கல் மொய்ம்பினன்
உயிரெலாம் தன்னுயிற்
கொப்ப ஓம்பலால்
செயிரிலா உலகினிற்
சென்று நின்றுவாழ்
உயிரெலாம் உறைவதோர்
உடம்பு மாயினன்

என்று அரசியற் படலத்து விளக்கிக் கூறியுள்ளார். இவ்விருவகைக் கருத்துக்களிலும் குடியோம்புதலில் அரசன் கண்ணும் கருத்துமாக இருக்க வேண்டும் என்பது கிடைக்குமாயினும் கம்பர் கருத்தில் சிறந்ததொரு நயம் காணப்படுகின்றது, என்ன எனின், உலகத்தை உடலாகக்கொண்டு அரசன் உயிராவான் என்பதில் உயிர் இயக்கிய வழி உடல் இயங்குதல்போல, அரசன் விருப்பப்படி குடிகள் நடக்க வேண்டும் என்னும் கருத்தும் தோன்றும். அது சிறந்த முறை ஆகாது என்பதும், 'குடி தழீஇக் கோலோச்சும் மாநில மன்னன்' என்னும் பொருளுரைப்படி குடிகளின் கருத்துக்குப் பொருந்த அரசன் செங்கோல் செலுத்துவதே சிறந்த முறை என்பதும் நம் பண்டைப் பெரியோர் கண்ட உண்மைகளாம். இச்சிறந்த நோக்கத்தையே கம்பர் நல்லதெனக் கண்டு உலகத்தை, உயிராகவும் அரசனை உடலாகவும் கொண்டு, 'வையம் மன்னுயிராக அம் மன்னுயிர், உய்யத் தாங்கும் உடலன்ன மன்னன்' என்று கூறுவர். உலகம் உயிராக அரசன் உடலாவான் என்னும் உயரிய இக்கருத்தில் குடிகளின் கருத்துக்கேற்பவே கோன் ஆட்சி நடைபெற வேண்டும் என்பது தெளிவாம். இதற்கு இலக்கியமாக அறிவு, திறமை முதலிய பலவகை நற்குணங்களுக்கும் நிலையமாக விளங்கிய தன் தலைமகனாகிய இராமனுக்கு முடிசூட்டக் கருதிய தசரதன் குடிமக்களின் பிரதிநிதிகளாகிய மந்திரக் கிழவர் முதலியோரை அழைத்து, அவர் தம் முன்னிலையில் தன் கருத்துக்களைச் செவ்வையாக விளக்கிக் காட்டி, முடிவில்,

'ஆதலால் இராமனுக்கு
அரசை நல்கிஇப்
பேதைமைத் தாய்வரும்
பிறப்பை நீக்குவான்
மாதவம் தொடங்கிய
வனத்தை நண்ணுவேற்கு
யாதுநுங் கருத்தென'

என்று வினவலானன் என்பர்.

இங்ஙனம் ஆட்சி செலுத்தும் அரசன் இந்நிலவுலகத்தை எவ்வாறு ஓம்பினன் என்பதைச் சிறந்ததோர் உவமையில் வைத்து நன்றாக விளக்கியுள்ளார். மிக்க வறுமையுடையான் ஒருவனுக்கு ஒரு செய்விளை நிலம் கிடைத்தால் அதனை எவ்வாறு பண்படுத்தித் திருத்தி உரமிட்டு இராப்பகலாக உழைத்துப் பாதுகாப்பானே, அவ்வாறே உலக முழுவதையும் இனிது காத்து அரசு செய்தான் என்னும் கருத்துத் தோன்ற, வையக முழுவதும் வறிஞன் ஓம்புமோர், செய்யெனக் காத்தினிது அரசு செய்கிறான் என்று கூறியுள்ளார்.

இன்னும் அரசன் குடிகளுக்குச் செய்யவேண்டிய நன்மைகளை வகைப்படுத்திக் கூறப் புகுந்த கம்பர் தசரதன், குணங்களைப் புனைந்துரைக்குமுகமாக,

தாயொக்குமன்பில் தவமொக்கும்
நலம் பயப்பில்
சேயொக்கு முன்னின்றொரு
செல்கதி உய்க்குநீரால்
நோயொக்குமென்னில்மருந்தொக்கும்
நுணங்கு கேள்வி
ஆயப்புகுங்கால் அறிவொக்கு
மெவர்க்கும் அன்னன்

என்று கூறியுள்ளார். மேலும் அரசன் இயல்பைப்பற்றி,

முறையறிந் தவாவைநீக்கி
முனிவுழி முனிந்துவெஃகும்
இறையறிந்துயிர்க்கு நல்கும்
இசைகெழு வேந்தன்

என்றும் கூறுவர். அரசன் அறநூலும் நீதிநூலும் சொல்லும் நெறிகளை அறிந்தவனாக இருக்கவேண்டும். எல்லாவற்றிற்கும் மூலகாரணம் கல்வியாதலாலும் அரசியல் நூல்களைக் கற்றல் அரசனுக்குச் சிறந்ததாகலானும் அது

(தொடர்ச்சி 8-ம் பக்கம் பார்க்க)

## கடவுள் யார்?

### மு. கோவிந்தசாமி

ஆர்ந்த இன்ப அழகே கடவுள்
அறிவு கனிந்த அமைதி கடவுள்
சேர்ந்த அன்பின் அருளே கடவுள்
செம்மை உயிரின் ஆற்றல் கடவுள்
கூர்ந்த உரிமைக் காட்சி கடவுள்
குழையும் தொண்டின் நன்மை கடவுள்
பாரை விளக்கும் ஒளியே கடவுள்
பார்க்கும் உலக உயிர்கள் கடவுள்

மன்னன் வளர்த்திடு நீதி கடவுள்
மகளிர் காதலும் கற்பும் கடவுள்
இன்பக் குழந்தை இளமை கடவுள்
அஞ்சா வீரனின் வீரம் கடவுள்
கன்னி மலரின் மணமே கடவுள்
கவியும் சோலைப் பசுமை கடவுள்
மன்னும் வாழ்வின் கடமை கடவுள்
மாந்தர் ஒற்றுமை மாண்பே கடவுள்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழகேசரி

சுன்னுகம்: விய, சித்திரை ௯

## நெருக்கடியான நிலை

**உலகம் முழுவதும் இந்**தியாவையே நோக்கி நிற்கின்றது. இம்முறை இந்தியா எவ்வித சுதந்திரத்தை யடையுமென்பதை அறிவதே உலக மக்களின் பெரிய வாஞ்சையாகும். இந்தியாவின் தலைநகராகும் டெல்ஹியில் இப்பொழுது ஏற்பட்டதுபோல அமளி என்றும் ஏற்பட்டதில்லை. எல்லாக் கட்சித்தலைவர்களும் அங்கேயே வதிகின்றனர். அரசியல் நிபுணர்களும் தேசாதிபதிகளும் அவ்விடத்திலேதான். புதிய பழைய மந்திரிசபையினரும் அங்கேதான். மந்திரிசபைத் தூதுக்கோஷ்டியினர் எல்லோருடைய அபிப்பிராயங்களையும் ஆராய்ந்தறிவதில் இளைப்பு அடைகின்றுரில்லை. எவரெவரைக் காணவேண்டுமோ அவர்களையெல்லாம் சந்தித்துக் கலந்து பேசிக்கொள்கின்றனர். எல்லோருடைய அபிப்பிராயங்களும் நாள்தோறும் பத்திரிகைவாயிலாக வெளிவந்துகொண்டே யிருக்கின்றன. இவை பெரும்பாலும் முன் வெளிவந்தனவேயாகும்.

இப்போது தூதுக்கோஷ்டியினர் பேச்சுக்களை ஒருவாறு முடித்துக்கொண்டு, ஆரோக்கியத்தைநாடிக் காஸ்மீரத்துக்குப் போயுள்ளார். ஒருவாரத்துள் மறுபடி டெல்ஹிவந்து சேர்வாராம். எல்லாவற்றையும் கேட்டிருந்த இம் மந்திரி சபைப் பிரதிநிதிகள் இனித் தமது அபிப்பிராயத்தை வெளியிடுவதே வேண்டப்படுவது. துணிவுடன் ஏதோ பெரிய நன்மை இந்தியாவுக்குச் செய்யப்போகின்றனரென்றே உலகம் இவர்களை எதிர்பார்த்த வண்ணமாக நிற்கின்றது. எது சரியோ, எது இந்தியாவின் நிலைமைக்கு ஏற்றதாகின்றதோ, அதை இந்த மந்திரி குழுவினர் தயங்காது செய்து இந்தியா விடுதலை அடைய வழிகாட்டுவாராக, இதுவே கடைசி மூறையாகும். இனிக் காலத்தைக் காரணமின்றிப் பின்போடுவதென்பது பிழையான இராச தந்திரமாகவே மதிக்கப்படும். இப்பொழுது இந்தியத் தலைவர்களுடன் கலந்துபேசிப்பலவிஷயங்களை இவர்கள் அறிந்தாராயினும், இந்திய சுதந்திரத்துக்குப் பெருந் தடையாகக் கருதப்பட்டவகுப்புத்துவேஷத்தைப் பற்றிப் புதிதாக எதையும் அறிந்திருப்பாரென நாம்நம்பவில்லை. காங்கிரஸ் கட்சியினரின் கோரிக்கைகளையும் முஸ்லீம் சங்கத்தின் பிடிவாதத்தையும் இந்தியாவுக்கு வர முன்னரே இவர்கள் நன்கறிவர்.

**ஆகையால்** வகுப்புத்துவேஷத்தை முன்னிட்டுச் சுதந்திரநாளை இவர்கள் பின்போடக் கனவிலும் நினையாரென்பதே எமது அபிப்பிராயமாகும். அப்படிச்செய்யின், இங்கிலாந்தில் இருந்துகொண்டே உண்மையைக்கூறிவிடலாமே. இம் மந்திரிசபையினர் துணிவுடன் சுதந்திரத்தை வழங்க வந்தனராகையால், எது இச்சமையத்தில் ஏற்றதோ அதைச் செய்து முடிப்பதே முறையும் நீதியுமாகும். எவராலும் திருப்தி செய்யப்படாதிருக்கும் வகுப்புவாதிகட்காக ஒரு பெரியநாடு சுதந்திரமடையாதிருக்க விடுவது பெரியவல்லமைபடைத்த பிரிட்டிஷார்க்கு மிகுந்தஇழுக்காகுமல்லவா? தமது விருப்பப்படி பாக்கிஸ்தானம் வழங்காவிடின், பெரிய கலகம் நிகழ்வது நிச்சயமென ஜனுப் ஜின்னு பலவழியாகப் பன்முறை பயமுறுத்தியுள்ளார். இந்தியாவுக்கு இப்போது வேண்டியது சுதந்திரம். அதற்காக உள்நாட்டுக் கலகம் ஏற்பட்டுக் கொலை நிகழ்ந்தாலும் பாதகமில்லையே. சுதந்திரத்திற்காக உயிர்த்தியாகங்கள் வேண்டுமாயின் அதனை யார்தான் தடுக்கவல்லார். பெரிய உலக மகாயுத்தம் நிகழ்ந்து கோடிக்கணக்கான மக்கள் உயிரிழக்கவில்லையா? இந்தியாவில் அப்படித்தான் கலகம் ஏற்பட்டு நூற்றுக்கணக்கானேர் இறக்க நேரிடினும், சுதந்திரமே வேண்டப்படுவது.

**மேலும்** இச் சமயத்திற் சுதந்திரத்தைப் பின்போடுவதென்பதும் கனவிலும் நினைக்கவியலாத விஷயம். கீழ் இந்திய தீவுகளில் வசிப்போர் பெரியதியாகஞ் செய்தமையாலன்றே இப்போது தமது பிறப்புரிமையாகும் சுதந்திரத்தை ஒல்லாந்தினரிடமிருந்து பெற்றனர். பேடிகள் போலப் பதுங்கி யொதுங்கிப் பணிந்து நிற்பின், இன்றும் அந்நாட்டிற்குச் சுதந்திரம் வந்திருக்குமா? அன்று. எல்லாத் துறைகளிலும் இந்தியாவிலும் பார்க்க மிக்க கீழ்நிலையிலுள்ள இந்த நாடு சுதந்திரத்தைப் பெற, அரசியலிலும், நாகரிகத்திலும் மிக்க முன்னேறிய இந்தியா, இன்னும் அடிமை நாடாகவிருந்து துயருற வேண்டியதா? இம்முறைதான் பிரிட்டிஷாரின் மனப்பான்மையைக் கடைசியாக உலகம் அறிவதாகுமென மகாத்மா காந்தியடிகள் கூறிவிட்டார். இந்தியாவின் நீங்காத நட்பினையோ அல்லது நிரந்தரமான துவேஷத்தையோ ஆங்கில மக்கள் பெறப்போகின்றனரென்பது இரு வாரத்துள் உலகம் அறியுமென்பது நம்பிக்கை. பிரிட்டிஷ் இராச தந்திரத்துக்கும் இப்பொழுதுதான் சோதனைக்காலம் வந்தது

**ஆகவே,** பிரிட்டிஷ் அரசினர் போலிச் சாட்டுகளை இந்தியர்மேற் சுமத்தி யாவரையும் நம்பி மோசம்போகவிடாது, யாவரும் எதிர்பார்க்கும் முறையில் இன்றே இந்தியர்க்கு விடுதலை அளித்துச் செல்வாராக. பாக்கிஸ்தான் திட்டத்தை இந்தியாவில் ஜனுப் ஜின்னுவின் கட்சியொழிந்த ஏனையோரெவரும் கைக்கொண்டிலர். சுதந்திரம் பெற்ற இந்திய அரசியலிற் பங்கு பெறவிருக்கும் சமஸ்தான மன்னர் எவராவது அங்கீகரிக்கவில்லை. இராணுவ வன்மையில் மிகவும் புகழ்படைத்த சீக்கியர் பாக்கிஸ்தான் வழங்கப்படின் பெருங் கலகம் நிகழுமென மனத்திடத்துடன் கூறுகின்றனர். மற்றைய எந்தச் சாதியினராவது கட்சியினராவது இந்தியாவைக் கூறுசெய்யச் சிறிதும் விரும்பினுரில்லை. காங்கிரஸ் கட்சியினர் இவ்விஷயமாகக் கொண்ட பிடிவாதமான அபிப்பிராயம் யாவரும் அறிந்ததொன்றே. மேலும் இந்தியாவின் பொருளாதார நிலை சீரடைதற்கு இந்தியா பிரிவினை யடையாதிருப்பது மிக அவசியம். ஆகையால் இச் சமயத்தில் இந்தியா சுதந்திரம் பெறுதற்கு வழிகாண்பதே முறை. இப்பொழுது இந்தியாவில் தலைகாட்டி நிற்கும் உணவுப் பஞ்சமும் இந்திய மக்களின் பொறுப்பினைப் பெற்ற அரசினராலேயே தடுக்கவியலும். இது மாத்திரமன்றிக் காலந்தாழ்க்காது இந்தியா கைத்தொழில், வியாபாரம் என்னுந் துறைகளில் விருத்தியடைந்து செல்வதற்கும் பூரண சுதந்திரம் அத்தியாவசியமாகும். எனவே இந்த அரிய சந்தர்ப்பத்தில்,—நவயுகம் ஆரம்பிக்கும் இச் சமயத்தில்—பிரிட்டிஷ் அரசினர் தமது பெருந்தன்மையைக் காட்டி இந்தியர் சுதந்திரம் பெற்று மன ஆறுதலடையச் செய்தல் வேண்டும். இன்றேல், எல்லாம் விபரீதமாகவே முடியும்.

## போலிஸாரின் ஊழல்கள்

**நாட்டின் நலத்தைப்** பாதுகாக்கும் உரிமை பூண்டவராகும் பொலிஸ் பகுதியினை நன்னிலைப்படுத்தவேண்டுமெனப்பலர் பன்முறை எடுத்துரைத்ததுண்டு. நாடு சன்மார்க்கவழியில் நிலைபெற்று நடுநீதி தவருது உய்வடைய வேண்டின் இப்பகுதியினர் தமது கடமைகளை சிறிதுங் குறைவின்றிச் செய்து நிற்பது மிகவும் அவசியமாகும். இவரைச் சீர்ப்படுத்தப் பன்முறை அரசினர் பலவித திருத்தங்களைக்கொண்டு வந்தனராயினும் அவைகளால் கருதிய நன்மை ஏற்பட்டில. இவ்விஷயமாக விசாரணை செய்து வேண்டிய திருத்தங்களை எடுத்துக் காட்டும்பொருட்டு ஒரு விசாரணைச் சபையை அரசினர் நிறுவியுள்ளார். அச் சபையின் முன் கூறப்பட்ட சாட்சியங்களை நோக்குமிடத்து பொலிஸ் பகுதியில் ஏற்பட்டுள்ள ஊழல்கள் எவ்வளவு கேவலமானவை யென்பது இலகுவில் அறியக்கிடக்கின்றது. பொலிஸ் பகுதி உத்தியோகத்தர் கூறிய சாட்சிகளிலேயே இவ் வூழல்கள் முற்றாக உண்மையென அங்கீகரிக்கப்படுவதால், இதைப்பற்றி ஆட்சேபம் வேண்டியதில்லையே. சம்பளக் குறைவு காரணமாகப் பொலிஸார் பொருளீட்டும் பொருட்டு நிதானந்தவறி ஊழல்களைச் செய்கின்றனரென்று கூறவுமியலாது. இப்பொழுது அவர்கட்கு வழங்கப்படும் சம்பளமும் மற்றைய சௌகரியமும் போதியதென்பதில் ஐயமின்று. இவர்கள் உத்தியோகத்தைப் பெற்றவுடன் பக்கத்திலுள்ளவர்களின் தூண்டுதலினுல் பழிப்புக்குரிய பழக்கங்களைப் பழகி விடுகின்றனராம். கவனமாகவும் மிக்க ஆராய்வுடனும் தகுந்த சிபார்சுடனும் தெரியப்பெற்ற இவ்வுத்தியோகத்தர் இவ்வித இழிந்த முறையில் தம்மைக்கொண்டு செல்ல ஆரம்பிப்பது நூதனமாகின்றதென ஓர் பொலிஸ் பகுதித் தலைவர் அதிசயத்துடன் கூறினர். ஆனல் ஒரு விஷயம் உண்மையாகும். பொலிஸ் பகுதியில் உத்தியோகம் பெற நன்னேக்குடையோர் விரும்புவதில்லை. கைக்கூலி பெற்று பெரும் பொருளீட்ட மிக்க வசதி இப்பகுதியில் [illegible] இதனை விருப்புடன் நாடுகின்றனர்.

# பாதை ஓரத்தில் ★

## பாட்டைசாரி

**கைவிசேஷம்** புது வருட வைபவங்களுடன் சேர்ந்த ஓர் அம்சம். கைவிசேஷத்தைச் சாட்டாகக்கொண்டு அநேகர் மடிநிரம்பப் பணஞ்சேர்ப்பதும் வழக்கமாகிவிட்டது. இந்த அனுபவம் எங்களில் அநேகருக்கு உண்டு. ஆனல் இந்தக்கைவிசேஷத்தின் மகத்துவத்தைக் கண்முன் பார்த்து அனுபவிக்கும் ஒரு சந்தர்ப்பம் சமீபத்திற் கிடைத்தது. அன்று கைவிசேஷ நாள். ஆமாம், பஞ்சாங்கத்தில் உள்ள நாள் என்ருல் நீங்கள் மறுபேச்சின்றி நம்புவீர்களல்லவா? இந்தச் சுப தினத்தில் வீதியருகே போய்க்கொண்டிருக்கையில் ஒருவர் மற்றொருவருக்கு மளார் மளார் என்று கன்னத்தில் அறைவதைக்கண்டு திகைத்தேன்.

"என்ன! நீ, யார் என்றுநினைத்தாய். நல்ல வேளையிற் சந்தித்தாய். கைவிசேஷம் உறைப்பாய் இருக்கின்றதா? "போய் வா" என்று சொல்லிவிட்டுக் கன்னத்தில் அறைந்தவன் சென்றுவிட்டான்.

### பெண்களின் பணி

**போறிஞர்** ஜோட் தத்துவ சாஸ்திரத்தில் ஒரு பேர் போன புலி. முரட்டுத்தனமாக நடந்து பிரபல்யம் அடைந்த ஒரு பேர்வழி. இவர் கூறும் சில உண்மைகள் சுவாரஸ்யமானவை. அத்துடன் ஊன்றி உணரத் தக்கன. இவர் பெண்களைப்பற்றி கூறியிருப்பன முழுக்க முழுக்கப் பொருத்தமானவை. ஆலயங்களும் நாடகசாலைகளும் பெண்களின் உதவியால் உயிருடன் இருக்கின்றன என்பது இவருடைய சித்தாந்தம். இந்த ஸ்தானங்களுக்கு மூச்சுப்பைகள் பெண்மணிகள் என்றுஞ் சொல்லிவிடலாம். அத்துடன் இன்னும் ஓர் இரகசியத்தைத் தெரிவிக்கின்ருர். பெண்கள் காட்சிகளைக் காணவும் காட்சியளிக்கவும் விரும்புகின்றனர். உளநூலின்படி இது ஒருவகை ஊக்கமாகவிருக்கலாம்.

### குணத்திலகா வித்தை

**அந்தக்** காலத்திலே பக்தர் ஒருவர் நரிகளைப் பரிகளாக்கிய அற்புதத்தை அறிந்திருக்கின்ருேம். எங்கள் காலத்தில் இப்படியான வேலையை சேர் குணத்திலகா செய்ய முயலுகின்ருர். அரிசி யாத்திரைக்குச் சென்றிருக்கும் இவர் அரிசியைக் குதிரையாக்கப் பார்க்கின்ருரோ, அல்லது குதிரையை அரிசியாக்கப் பிரயத்தனங்கள் செய்கின்ருரோ தெரியவில்லை.

ஆசிரியர் வ. ரா. இதையறிந்தால் ஸ்ரீ குணத்திலகா "எய்க்கிற வித்தை"யில் ஈடுபடுகின்ருர் என்று சொல்லுவாரோ என்னவோ? "ஒரு காரியம் சரியாக நடைபெறுமற் போய், அதனுற் கேடுகள் விளைந்தால், உடனே, பிறர்பேரிற் பழியைச் சுமத்தித் தாங்கள் தப்பித்துக்கொள்ளப் பார்ப்பது இப்பொழுது, இந்த நாட்டிற் சகஜமாகிப் போய்விட்டது" என வ. ரா. எய்க்கிற வித்தையை விளங்கத் தருகின்ருர். எய்க்கிற வித்தை சாமானியமான விளையாட்டல்ல. இது ஒரு தனிக்கலை!

### அற்புத மனிதன்.........

**மனிதர்கள்** பிறக்கின்றனர்; மறைகின்றனர். ஆனல் உலகத்தில் ஒப்புயர்வற்ற மனிதர்களும் மாணிக்கங்களாகத் திகழ்ந்துவிட்டு மறைந்துவிடுகின்றனர். இவர்கள் அற்புதப் பிறவிகள். கடந்தவாரம் உலகம் ஒரு வித்தகனை இழந்தது. ஸ்ரீனிவாச சாஸ்திரி அவர்களின்பெருமையை உலகறியும். ஆங்கிலவாணியைக் கூடக் கலங்க வைத்துவிட்டு ஸ்ரீனிவாச சாஸ்திரியார் அமரவாழ்வு எய்திவிட்டார். இறக்கும்போது இவருக்கு 76 வயது. ஒரு நல்லாசிரியனுக வாழ்க்கையை ஆரம்பித்த சாஸ்திரியார் இந்தியாவின் ஒப்புயர்வற்ற கலைஞனுக விளங்கினுர். உலகின் உன்னத பேச்சாளராகத் திகழ்ந்தார். ஆங்கிலேயன்கூட வெட்கித் தலை குனியும்படி ஆங்கிலத்தில் பிரசங்க மாரி பொழிந்தார். அவர் பேச்சைக் கேட்கும்போது கைலாசத்தில் இருப்பது போன்ற ஒரு உணர்ச்சி ஏற்படுவதுண்டு.

இக்கலைவாணன் ஈழநாட்டுக்கு 1937-ம் ஆண்டில் வந்தார். தனது குருவைத் தரிசிப்பதற்காக யாழ்ப்பாணம் வந்து அருமையான பிரசங்கம் நிகழ்த்தினுர்

### .......இலக்கியக் கலைஞன்

**ஆங்கிலத்தை** அப்பழுக்கின்றி ஆர்வத்துடன் பயின்ற ஸ்ரீனிவாச சாஸ்திரியார் பத்திரிகை உலகிலே தனக்கென ஒரு ஸ்தானத்தைத் தேடியுள்ளார். தமிழ் எழுத்தாளன் என்று சொல்லும் பெருமைக்கும் பாத்திரமானவர். ஆனந்தவிகடன், கல்கி போன்ற பத்திரிகைகளின் தீபாவளி மலர்களை யெல்லாந் தமது எழுத்துக்களால் அழகுறச் செய்து உயர்த்தி வைத்தவர். இத்தகைய பேரறிஞனின் பிரிவு எழுத்தாளர்க்குப் பெரு நஷ்டமாகும். இதை யார் இனி ஈடு செய்ய முடியும்?

# போதனைக் கருவி மொழி

> **தாய்மொழியல்லாத** வேறொரு மொழியைக் குழந்தைகள் மீது சுமத்துவது தாய் நாட்டிற்குச் செய்யும் பெரிய பாபமென்பது காந்திஜிகருத்து. போதனைக் கருவிமொழி என்ற ஆராய்ச்சிக் கட்டுரை ஒன்றை ஸ்ரீ நாராயணன் அகர்வால் எழுதினுர். நவயுகப் பிரசுராலயம் அதைப் புத்தக ரூபத்தில் வெளியிட்டிருக்கின்றது. இது அதில் ஒரு சிறு பகுதி.
>
> ப. ர்.

**ஆங்கில மொழி மூலம்** கல்விபுகட்டுவது என்பது இந்திய மாணுக்கரின் அறிவாற்றலுக்குப் பெருஞ் சுமையாக இருக்கிறது; அதுமட்டுமல்ல, அவர்களின் சிந்தனு சக்திக்கே இதனுல் பங்கமேற்படுகிறது. எண்ணமும் எழுச்சியுங்கூடத் தடைப்படுகின்றன; உதித்த எண்ணத்தை உரிய முறையில் வெளியிடவும் அவர்களுக்கு ஆற்றல் இல்லை. இவை நிலைநாட்டப்பட்ட உண்மைகள். தாய்மொழி புறக்கணிக்கப்பட்ட காரணத்தாலேதான் மாணுக்கர்களிற் பெரும்பான்மையோர் எந்த மொழியிலுமே தெளிவாக நினைக்கவோ எழுதவோ முடியாமற் போய்விட்டதென்று பஞ்சாப் சர்வகலாசாலை விசாரணைச் சபை தெளிவாக எடுத்துக் காட்டியிருக்கிறது. ஆங்கிலக் கல்வி, நம் மாணுக்கர்களுக்குப் பெரும் பாரமாக அமைந்ததோடல்லாமல், அவர்களின் தனிப்பண்பையும், தன் முயற்சியையுமே நசுக்கத் தொடங்கிவிட்டது. அவர்களின் தன்னம்பிக்கைக்குக்கூடக் குழிதோண்டிவிட்டது; இவற்றிற்கெல்லாம் மேலாகத் தங்களைத் தாங்களே தாழ்வாக மதித்துக் கொள்ளும் மனப்பான்மையையும் அவர்களிடையில் பலவந்தமாகத் திணித்துவிட்டது. விலை மதிப்பரிய பல ஆண்டுகளைப் பாழாக்கிய பிறகு, இந்திய மாணுக்கர் ஆங்கிலத்திலோ அன்றி, தாய்மொழியிலோ தேர்ச்சியடையாமல் திண்டாடுகின்றனர். மொழி என்பது நமது எண்ணங்களை எடுத்துரைக்கும் கருவியே. மொழியாட்சி தக்கமுறையில் அமையாவிட்டால், உள்ளக் கருத்தைச் சரியானபடி வெளிப்படுத்துவது என்பது அசாத்தியம். கல்லூரி மாணுக்கர்களின் ஆங்கில அறிவு, வருந்தத்தக்கவாறு இவ்வளவு குறைவுடையதாயிருப்பதன் காரணமென்ன என்பதையறியச் சில இந்திய சர்வகலாசாலைகள் ஆர்வமுறுகின்றன. ஆங்கிலம் போதிப்பதில் இன்னும் அதிக கவனம் செலுத்தி, மாணுக்கரின் மொழி வன்மையை அதிகரிக்க வேண்டுமென விதவிதமான வழிகளை மேற்கொள்ளுகின்றன. தாய்மொழி மூலம் கல்வி போதிக்கும் முறையைப் புகுத்தினுல், ஆங்கிலத் தகுதி இன்னும் குறைந்துவிடுமேஎன்று அவர்கள் கவலைப்படுகிருர்கள். இது மாட்டுக்குமுன் வண்டியைப் பூட்டும் விபரீதந்தான். தாய்மொழியிற் பாண்டித்தியம்பெறும் சந்தர்ப்பத்தை அளித்து, தாய்மொழி மூலம் சகல பாடங்களும் கற்பிக்கப்பட்டால், மாணுக்கருக்கு எண்ணத் தெளிவு ஏற்படுவது உறுதி; கருத்துப் பிடிபடும்; உள்ளத்திலும் பதியும். தாய்மொழிப் பாண்டித்தியமே, ஆங்கில மொழியை எளிதிற் புரிந்து கொள்ளும்படி செய்யும். அதனுல் மாணுக்கர் ஆங்கில மொழியை மிக லாகவமாகவும் எளிதாகவும் கையாள வசதி யுண்டாகும். இதற்கு மாருக, ஆங்கிலம், தாய்மொழியைக் கவிழ்த்துவிட்டு ஆதிக்கம் செலுத்துவதானுல், இந்திய மாணுக்கர் விஷயம், எ[...]றுமே தீர்க்கப்பட முடிய[...] பிரச்னையாகவும், வி[...] தாகவுமே இருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தியா

# சுதந்திரப் பாதையிலே

## "ஜயமுண்டு பயமில்லை......"

—பாரதியார்

இந்தியத் தலைவர்களுடன் ஒரு உடன்படிக்கை செய்த பின்னரே ஊர் திரும்ப வேண்டுமென இந்தியாவில் நிற்கும் மந்திரிகளான பிரபு பெதிக் லோரன்ஸ், சேர் கிரிப்ஸ், அலெக்ஸாண்டர் ஆதியோருக்கு பிரிட்டிஷ் அரசாங்கம் உத்தரவிட்டிருப்பதாகத் தெரிகின்றது. இது மகிழ்ச்சிதருஞ் செய்தியாகும்.

தூதுக் கோஷ்டியினர் முக்கியமான விஷயங்களில் இப்போது கவனத்தைச் செலுத்துகின்றனர். இந்தியாவின் தலைவர்கள் என்று கருதப்படும் அநேகரைச் சந்தித்து இந்திய விடுதலை சம்பந்தமாக மாசுமறுவற்ற பேச்சுக்களை நடத்திவருவது பலருக்கும் நம்பிக்கையை ஊட்டுகின்றது. "அன்று பிரிட்டிஷார் ஜாலியன்வாலாவில் நம் மக்களைச் சுட்டுத்தள்ளினார்கள். இன்று பிரிட்டிஷ் தூதுக்கோஷ்டியினரும் இராஜப்பிரதிநிதியும் இந்தியாவிலிருந்து அமைதியாக மூட்டைகட்டிக்கொண்டு வெளியேற ஏற்பாடுசெய்து வருகின்றார்கள். ஜெயப்பிரகாஷ், லோகியா விடுதலையும் இந்திய தேசீய இராணுவ வீரர்களை விடுவித்ததும் அவர்களின் நல்லெண்ணத்துக்கு அறிகுறிகள். தூதுக் கோஷ்டியிடமும் இராஜப்பிரதிநிதியிடமும் எனக்கு அவநம்பிக்கை "யில்லை" என்று தேசிய வாரத்தின் கடைசித் தினத்தில் காந்திஜி பிரார்த்தனைக்குப் பின்னர் பேசும்போது குறிப்பிட்டிருக்கின்றார். இந்தியாவின் விடுதலை உதயமாகிக்கொண்டிருக்கும் இந்த வேளையில் ஜனாப் ஜின்னா போன்ற வகுப்புவாதிகள் முட்டுக்கட்டைபோடுவார்களாகில் அவர்கள் நாட்டுக்குத் துரோகஞ் செய்பவர்களாகின்றனர். இதற்கிடையில் முஸ்லிம் லீக் தலைவர் தாம் ஓர் இந்தியன் அல்ல எனவுங் கூக்குரல் இட்டிருக்கின்றார். அத்துடன் லீக்கின் கோரிக்கைகளை பிரிட்டன் நிராகரிக்குமானால் ருஷியாவிடம் உதவி தேடப் போவதாகவும் முஸ்லிம் லீக் பயமுறுத்துகின்றது. பிரிட்டனும் இதைத் தட்டிக் கழிக்க முடியாது?

தூதுக்கோஷ்டி 'கொன்பெடரேஷன்' (இணைக்கப் பெற்ற சமஷ்டி) த்திட்டத்தையும் காங்கிரஸுடன் ஆலோசித்திருக்கின்றது. இத்திட்டத்தின்படி இந்து பெடரேஷன் (சமஷ்டி) முஸ்லிம் பெடரேஷன் என இரு சமஷ்டி அரசியல் முறை ஏற்படும். பாதுகாப்புத் தவிர்ந்த ஏனைய விஷயங்களில் எல்லாம் அந்தந்த அரசாங்கத்துக்கு அதிகாரம் அமையும். இரு பெடரேஷன்களும் கொன்பெடரேஷன் மூலமாகவே பாதுகாப்பு ஒழுங்குகளை அமைக்க வேண்டும். இத்திட்டம் காங்கிரஸின் ஐக்கிய இந்தியா திட்டத்துக்குக் கிட்டத்தட்டக் கொண்டு செல்வதாக விருந்தபோதிலும் கொன்பெடரேஷன் திட்டத்தைக் காங்கிரஸ் தலைவர்கள் ஏற்றுக்கொள்ளப் போவதில்லை. ஏனெனில் இதில் ஆபத்தான அம்சங்கள் அநேகம் உள்ளடங்கிக் கிடக்கின்றன.

இத்திட்டம் ஒருபுறமிருக்க இடைக்கால அரசாங்கம் ஒன்று ஏற்பட்டே தீரும். இதில் லீக்கர்கள் சேரலாம். சேராமலும் விடலாம். முஸ்லிம் லீக்கின் ஆதரவில்லாமலே இடைக்கால அரசாங்கம் ஏற்படக்கூடும். இத்தகைய ஓர் அரசாங்கம் உருப்பெற்றதும் ஜின்னா போராட்டம் ஆரம்பிப்பாரெனவுங் கருதப்படுகின்றது. ஜனாப் ஜின்னா கைது ஆவதற்கும்தயாராகவிருக்கின்றார்.

### காங்கிரஸின் புதிய திட்டம்

நான்கு நாள் விவாதத்தின் [illegible]ன்னர் காங்கிரஸ் ஒரு புதிய [illegible]தை நாட்டுக்கு அளித்தி[illegible] இதில் நான்கு [illegible]ன கொள்கைகள் [illegible]ன்றன. அவை

முதலாவது: பரிபூரணசுதந்திரம்

இரண்டாவது: ஐக்கிய இந்தியா

மூன்றாவது: மாகாணங்களுக்கெல்லாம் பூரண சுயாட்சி.

அதிகாரங்கொண்ட ஒரு சமஸ்டியும் ஏற்படுத்தப்படும். இதிற்சேரும் அங்கங்கள் அனைத்தும் பூரண மாகாண சுயாட்சி பெறுவதுடன் மிகுந்த அதிகாரமும் அவற்றின் கையிலே யிருக்கும்.

நான்காவது: மத்திய அரசாங்கத்துக்கு இரு விபர அறிக்கைகள் இருக்கும். ஒன்று கட்டாயமாகும். மற்றொன்று இஷ்டப்பட்டாற் செய்யலாம். இது மத்திய அரசாங்கத்தின் அதிகாரத்துக்குட்பட்ட விஷயங்களை வரையறுக்கும்.

இப் புதிய திட்டம் முஸ்லிம்களின் பீதிகளைப் போக்குகின்றது. அவர்களுக்குப் பூரண உரிமையையும் ஆறுதலையும் உதவுகின்றது. பாகிஸ்தான் திட்டத்திற் காணப்படுங் குறைகளை இதிற் காணமுடியாது. பாகிஸ்தான் திட்டம் முஸ்லிம்களைச் சிற்சில மாகாணங்களில் அன்னியர்களாக்குகின்றது. ஆனாற் புதிய காங்கிரஸ் திட்டத்தில் அக்குறை ஏற்படமுடியாது. மத்திய அரசாங்கத்தில் இந்து ஆதிக்கம் நிலவுமென முஸ்லீம்கள் பயப்படுகின்றனர். இனி இவ்விதமான பயம் இருக்கவேண்டியதில்லை. ஏனெனில் மத்திய அரசாங்கத்துக்குட்பட்ட விஷயங்கள் குறைந்த அளவிலேதான் இருக்கும்.

பெரும்பான்மையான முஸ்லிம்கள் பாகிஸ்தான் திட்டத்தை ஆதரிக்கின்றார்கள் என்று நம்புவதற்கில்லை. லீக்கின் பாகிஸ்தான் திட்டத்தையும் காங்கிரஸ் திட்டத்தையுஞ் சீர்தூக்கிப் பார்ப்பவர்களுக்கு காங்கிரஸ் திட்டம் முஸ்லிம்களுக்குச் சிலாக்கியமாக விருப்பதை அறிவார்களென ராஷ்டரபதி அஜாத் நம்புகின்றார்.

### காங்கிரஸின் தியாகம்

இந்திய மக்களின் தியாக வாழ்க்கைதான் இப்போது இந்தியாவைச் சுதந்திரத்தின் தலைவாயிலிற்கொண்டு வந்திருக்கின்றது. இந்தியர்களிடம் சுதந்திரத்தை ஒப்படைக்கவேண்டுமெனத்தூதுக் கோஷ்டியினர் இதுவரை தீர்மானித்திருப்பார்கள். அமெரிக்காவும் பிரிட்டனும் இதை ஆதரிக்காமல் இருக்கமுடியாது. இந்தியா சுதந்திரம் பெறும் உரிமைக்கு அருகதையானது. பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்திலிருந்து இந்தியா விலகியுங்கொள்ளலாம். இதைப் பிரிட்டிஷ் அரசாங்கம் ஏற்கவுந் தயார். எப்படி இருந்தபோதிலும் இருநூறு வருடகாலமாக மக்கள் உள்ளங்களில் ஊறியிருக்கும் வெறுப்பைச்சுலபமாக மாற்ற முடியாது. ஆனால் அட்லி ஆட்சி இத்தனைக்கும் பரிகாரஞ் செய்யுமென்ற நம்பிக்கை பலருக்கும் உற்சாகத்தை யூட்டுகின்றது. பிரிட்டனின் ஆட்சிக்கு முடிவுகாலம் நெருங்கிவிட்டதென்பதற்கு இந்தியக் கடற்படையினரின் கலகம் ஒன்றே போதிய சான்றாகும். புதிய உலகில் நிரந்தர சமாதானம் நிலவவேண்டுமாகில் இந்தியா சுதந்திர நாடகத் திகழவேண்டும். அதிருப்தியும் ஏமாற்றமும் நிறைந்த இந்தியா பிரிட்டனின் சர்வதேச அரசியற் கொள்கைகளுக்குக் குந்தகம் விளைக்குமென்பதை அழுத்தந் திருத்தமாகக் கூறலாம்

—இ. அ

---

கடிதம்

## இலக்கிய ரஸிகர்களுக்கு

பத்திரிகைகளும் சஞ்சிகைகளும் மலிந்துள்ள இக்காலத்தில் மேலும் ஒன்றைத் தொடங்கி நடத்துவதென்றால் சிறிது ஆலோசித்துப் பார்க்கவேண்டும். ஆனால், நுண்ணிதான கலாரசனைக் கேற்ற ஒருமாத சஞ்சிகை தமிழில் அவசியம் வேண்டப்படுகிறதென்பது பலரது அபிப்பிராயம். ஆங்கிலத்தில் நடைபெற்ற 'திரிவேணி' போன்ற தொன்று, இன்னும் விசேஷமாக, தமிழில் வெளிவர வேண்டுமென்பது எத்தனையோ வருஷகாலமாக இலக்கிய—கலா விநோதர்களின் கனவாகவேயிருந்துவருகிறது. இந்தப் பணியை யார் நிறைவேற்றப்போகிறார்கள்?

படிப்பதற்கு எவ்வளவோ இருப்பினும் சுவைஉணர்ச்சியைப் பெருக்கத்தக்க சாதனம் ஒன்றுமில்லை. இலக்கியம், நுண்கலைகள் ஆகியவற்றை முறைப்படி அனுபவிக்கத்தக்க சுவை உணர்ச்சி உயர்ந்த ரீதியில் வளர்க்கப்படவேண்டும். இதற்குத் தக்க சாதனம் ஒன்றிலே, அவ்வத் துறையில் பாண்டித்தியம் பெற்றவர்கள் எழுதவேண்டும். பாண்டித்தியமுள்ளவர்கள் எழுதி அனுபவிக்கவும் சுவையுள்ளவர்கள் படித்தனுபவிக்கவும் ஒருபொதுப் பீடமாக உயர்ந்த சஞ்சிகையொன்று தமிழிலே தேவைப்படுகிறது.

இவ்விஷயமாக இலக்கிய ரசிகர்களின் அபிப்பிராயங்களை பொதியம் இலக்கியக்கழகத்தார் வரவேற்கின்றனர். இலங்கையிலும், இந்தியாவிலுமுள்ள சிறந்த அறிஞர்களையும் சிந்தனையாளர்களையும் அபிப்பிராயம் கூறுமாறு வேண்டுகின்றோம். இலக்கிய மதிப்பெடுத்து ஆதரவு எவ்வளவிருக்கின்றதெனப் பார்த்து அதற்கு வேண்டிய காரியத்தைச் செய்யப் பொதியம் இலக்கியக் கழகம் முடிவு செய்திருக்கிறது. எழுத்தாளரும், வாசகரும், 'ஈழகேசரி' அபிமானிகளும் தமது அபிப்பிராயங்களை காரியதரிசி, பொதியம் இலக்கியக் கழகம், 20, 44-வது லேன், வெள்ளவத்தை (கொழும்பு) என்ற விலாசத்துக்கு எழுதித் தெரிவிக்குமாறு கேட்டுக்கொள்ளுகிறோம்.

சோ. சிவபாதசுந்தரம்
தலைவர்,
பொதியம் இலக்கியக் கழகம்,
20, 44-வது லேன்,
வெள்ளவத்தை.
16-4-46.

---


## திருமண அழைப்பு

முகூர்த்தம்: { வியவருடம் சித்திரைமாதம் 10-ந் திகதி (22-4-46) திங்கட்கிழமை காலை 9 மணி

நலமேவு நல்லூரி லோங்கும் அம்பலவாணர்
நிலவுமகள் ஜெயராணிக்குப்
புலமேய புலோலிப் புரவோன் அருணந்தி
புதல்வனும் முதன்மகேந்திரன்
வலமான வரனென வகுத்தார், முகூர்த்தங்
காலைமணி யொன்பதா மென்னவே;
தலமான 'நெய்தலங் கானற்கும்' மணிநான்கு
மாலையில் [illegible]

[2728]


---

# நமது வாசிகசாலை

## பிரயாண நினைவுகள்

**உலகம் சுற்றும் தமிழன்:—** ஆசிரியர்: ஏ. கே. செட்டியார். குமரிமலர் வெளியீடு. விற்பனை உரிமையாளர்: தமிழ்ப் பண்ணை, தியாகராய நகர்—சென்னை. பக்கம்: 242. விலை ரூபா 4—0—0.

ஸ்ரீ செட்டியார் அவர்களின் பிரயாண நூல்கள் ஏற்கனவே வெளிவந்துள்ளன. அப்புத்தகங்களிலுள்ள பெரும்பாலான கட்டுரைகளையும், மற்றுஞ் சில பத்திரிகைகளில் வெளிவந்த கட்டுரைகளையும் தொகுத்து இப் புத்தகம் வெளியிடப்பட்டிருக்கின்றது.

பிரயாணக் கட்டுரைகள் எழுதுஞ் ஸ்ரீ செட்டியார் அதற்கென ஒரு முறையைக் கையாளுகின்றார். மாணவர்கள் உட்படச் சகலரும் வாசித்து ரசிக்கலாம். லண்டன், அமெரிக்கா, சிம்லா கோவா போன்ற இடங்களைப் பற்றி எழுதும்போது பிரயாணஞ் செய்யாமலிருப்பவர் எவற்றை யறிய விரும்புவரோ அவ் விவரங்களை யெல்லாங் கூறுகின்றார். "கோவா என்றதும் பால் கோவா ஞாபகந்தான் வருகிறது. ஆனால், நான் இங்கே எழுதுவது பால் கோவாவைப் பற்றியல்ல; நமது நாட்டிலே போர்ச்சுக்கீசியருக்குச் சொந்தமான கோவா என்னும் பிரதேசத்தைப் பற்றித்தான்" என்று நகைச்சுவையுடன் ஆரம்பிக்கின்றார்.

'ஜயப்பூர் வழியாக' என்ற கட்டுரையைப் படிக்கும்போது உண்மையாகவே நாம் சரித்திரத்தின் வழியாகச் செல்கின்றோம் என்ற உணர்ச்சி ஏற்படுகின்றது.

ஜப்பானியக் கவிஞர் நோகுச்சி, நோபல் பரிசு பெற்ற பிரான்ஸ் தேசத்து அறிஞர், ரோமெயின் ரோலந்து ஜெர்மனியிற் சந்தித்த பைதான் சாஸ்திரியார் போன்ற பேரறிஞர்களைப்பற்றி ஆசிரியர் சுவையுடன் எழுதியுள்ளார். பைதான் சாஸ்திரியார் அந்தக் காலத்தில் ஜெர்மன் பல்கலைக் கழகத்திலே தமிழ் ஆசிரியராக விருந்தவர். முறையாகத் தமிழ் பயின்ற பைதான் சாஸ்திரியாருக்குத் தமிழிற் பேரார்வம் உண்டு.

பிரயாணக் கட்டுரைகள் எழுதும்போது செட்டியார் அவர்கள் தேசபக்தியையுங் கிளறுவதுடன் அடிமை வாழ்வின் இழிவையும் எடுத்துக் காட்டிக் கொண்டே போகின்றார்.

தமிழிற் பிரயாண நூல்கள் மிகக் குறைவு. இதை நிறைவு செய்து வருபவர் ஸ்ரீ செட்டியார். இத்துறையில் இவருக்கு நல்ல அனுபவம் உண்டு. இவருடைய சகல பிரயாணக் கட்டுரைகளையுந் தாங்கி அழகாக வெளிவந்திருக்கும் இந்நூலின் சிறப்பே தனி.

—அரியரத்தினம்

### திருக்குறள் நீதி நூற் கதைகள்

ஆசிரியர்: ம. சுந்தர சுப்பிரமணியன். பிரசுரம்: அல்லயன்ஸ் கம்பெனி, மயிலாப்பூர் சென்னை. விலை: ரூ. 1—0—0.

சிறந்த நீதி நூலாகிய திருக்குறளில் உள்ள ஒவ்வோர் அதிகாரத்திலும் ஒவ்வொரு குறளை எடுத்து அவற்றுக்குப் பொருத்தமான ஒவ்வொரு கதைமூலமாக இவ்வாசிரியர் இந்நூலில் விளக்குகின்றார். இப்படி இல்லறவியலுக்கு மாத்திரமே செய்துள்ளார். காலப்போக்குக்கு இவரது புதுமுயற்சி பொருத்தமானது. பாடசாலைச் சிறுவர்களுக்கும் பாமர மக்களுக்கும் அவ்வக் குறள்களை விளக்கி மனதிற் பதித்தற்குச் சாதகமானது. பாரதம், வேறு புராண இதிகாசங்களில் இருந்து கதைகளைத் தெரிந்தெடுத்துக் கோத்திருக்கின்றார். ஒவ்வோர் அதிகாரத்திலும் குறைந்தது சிறந்த மூன்று நான்கு குறள்களுக்கேனும் இவ்வாறு செய்திருப்பின் பெரிதும் பயன்படும். வேண்டின் கதைகளை ஓரளவுக்குச் சுருக்கலாம். பெரும்பாலும் புராணக் கதைகளையே எடுத்தல் திருக்குறளை

'நமது வாசிகசாலையில் விமர்சனத்திற்கு நூல்கள் அனுப்புவோர் ஒவ்வொன்றிலும் இரண்டு பிரதிகள் அனுப்புதல் வேண்டும். மதிப்புரை விரும்புவோர் இதைக்கவனிப்பார்களாக.

யும் புழுகாக்கிவிடும். மற்ற இயல்களுக்கும் இவ்வாறே முயலுதல் விரும்பப்படத்தக்கதாகும்.

—நா. க.

### பின்வந்த நூல்கள்

**அருமைப் புதல்விக்கு:—** ஸ்ரீ எஸ். சத்தியமூர்த்தியின் கடிதங்கள். தமிழாக்கியவர்: எஸ். நீலமேகம். பிரசுரம்: தமிழ்ப்பண்ணை, தியாகராயநகர், சென்னை. பக்கம்: 334. விலை: ரூபா 5—0—0.

**மஞ்சி விரட்டு:—** ஆசிரியர்: கொத்தமங்கலம் சுப்பு. பிரசுரம்: பவானி பிரசுரம், ராயவரம். புதுக்கோட்டை சமஸ்தானம். பக்கம்; 152. விலை: ரூபா 3—8—0.

### உலகப் பெருநாவலர்

சிறந்த அரசியல்வாதியும் ஆங்கிலத்தில் சிறந்த சொற்பொழிவாற்றும் வன்மையும் பெற்றிருந்த கௌரவ ஸ்ரீமான் V. S. ஸ்ரீநிவாச சாஸ்திரியார் சென்ற புதன்வாரத்தன்று இறந்தனரெனக்கேட்டுப், பிரதானமாக இந்திய மக்களும், பொதுவாக உலகப் பெருமக்கள் யாவரும் துன்புறுகின்றனர். காலஞ் சென்ற ஸ்ரீமான் கோபலகிருஷ்ண கோகலேயின் சீடராய் அவர் பாதச் சுவட்டுவழி சென்று அடைதற்கரிய மிக உயர்ந்நிலை யடைந்தோர் இவர்போல் எவரும் இல்லையெனலாம். மிதவாதக் கொள்கைய அரசியல் விஷயங்களில் உடையராயிருந்தும் இவர்மாட்டு அமிதவாதிகளாகும் காங்கிரஸ் கட்சியினரும் விசேஷ மதிப்புக் காட்டிவந்தனர். சமீபத்திற் சென்னைக்கு வந்தகாலத்து மகாத்மாகாந்தியடிகள் வைத்தியசாலைக்குச் சென்று நோய்வாய்ப்பட்டிருந்த இவரை ஒரு முறைக்கிரு முறை கண்டு பேசிச்சென்றனராவர். அரசியல் விஷயங்களில் இவர் வெளியிடும் அபிப்பிராயங்கள் அரசினருட் பட யாவராலும் விரும்பிநோக்கப்படுவனவாகும். இந்தப் பெரியாரின் சொற்பொழிவாற்றும் வன்மையை நாம் எடுத்துரைத்தல் மிகையாகும். ஆங்கில மேதாவிகள் பன்முறை இவரைப் புகழ்ந்து பாராட்டியமை உலகப் பிரசித்தம். ஆங்கிலத்தில் திறமையாகப் பேசக்கூடிய ஐம்பெரும் நாவலர்களில் இவர் முன்னணியில் வைக்கப் படக்கூடியவரென்றார் பல்போர் பிரபு. இவராற்றிய பேச்சினை 'நான் பேசியிருந்தாலோ' வென்று வாயூறினர் முன்னர் பிரிட்டிஷ் முதன் மந்திரியாராக விருந்த மிஸ்டர் போல்ட்வின். சிறந்த பேச்சாளராகவும் முதன் மந்திரியாகவுமிருந்த மிஸ்டர் லோயிட் ஜோர்ஜ் இவர் பிரசங்கமொன்றைக் கேட்பதற்காக மந்திரிசபைக் கூட்டத்தை ஒத்திவைத்தாராமே. இத்தகைப் பெரிய இந்திய மேதாவியின் பிரிவு பெரும் விசனத்தை உண்டு பண்ணுவதாகும். மேலும் இந்தியா அரசியற் சுதந்திரத்தை பெறுந் தறுவாயில் இவர் போன்ற விற்பன்னரின் நீங்காத உதவியும் தொண்டும் பெரிதும் நாடப்படுவனவாகும். இவரின் பிரிவாக ஏற்றகவலை இம்மட்டன்று. இவர் குடும்பத்தினர்க்கு எமது அனுதாபத்தையும் தெரிவிக்கின்றோம். இப்பெரியாரின் ஆத்மா சாந்தியடைவதாக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஈழ நண்பர்களே !

# வந்தது மோசம்

எங்களை மூன்றரை வருட காலமாகப் பிடித்திருந்த அட்டமத்தான் விட்டு விட்டான். எங்களுக்கு இனிமேல் விமோசனம் என்று ஆனந்தங் கொண்டாடினோம். கோயில் குளங்களுக்குச் செய்வதாக எண்ணியிருந்தபிரார்த்தனைகள் அனைத்தும் செய்தோம். ஊரால் வரவேண்டியிருந்த கடிதமும் சந்தோஷச் செய்திகள் நிறைந்ததாக வந்து சேர்ந்தது. எங்கள் ஆனந்தத்திற்கு எல்லையில்லை. கடிதங்கள் மேலும் மேலும் வந்தன. கப்பல் போக்குவரத்துகள் தாமதமாய் வருவதால் எயர் மெயிலிலும் கடிதங்கள் பறந்து வருகின்றன. முதலெழுதியகடிதங்கள் போலல்ல; பல்லவிகள் மாறிமாறிக்கொண்டு வருகின்றன. கடிதங்கள் மேல் வெறுப்பு ஏற்படுகிறது. தபால் கொண்டு வரும் "பியோ"னை எதிர்பார்த்திருந்த கண் இப்போது விலேசமடைகின்றது. சில சமயங்களில் இந்தச் சண்டை ஏன் முடிந்தது என்று கூட எண்ண வேண்டியிருக்கிறது. ஒவ்வொரு கடிதத்திலும் பணம் வேண்டுமென்ற கதைதான். "வீடுவேய்ந்த கணக்கிற் கொஞ்சம் பாக்கி" "பிள்ளையின் கலியாணத்திலே சதிர்க் கச்சேரி நடத்தியதால் கொஞ்சங் கடன்." "தகப்பனின் திதி செய்தபோது சில்லறை கொடுக்க வேண்டியிருக்கிறது" என்றவைபோன்ற பல "பில்"கள். அதற்குள் வந்தது மோசம். அலவன்ஸ் நின்று விட்டது? இதற்காகத்தான் முன்னமே சொன்னேன். இந்த யுத்தம் என் இன்னும் நீடிக்கவில்லை. அப்படித்தான் நீடிக்கா விட்டாலும் வாழைப்பழ நோட்டு ஏன் மதிப்பில்லாது போகவேணும். இதுவெல்லாம் அந்தக் கிரகம் செய்யும் கோளாறு. எங்கள் குடும்பத்தார்களுக்குக் கொடுத்த பணத்தை எங்களிடம் வசூல் செய்யப்போவதாக ஓர் பிரஸ்தாபம். நாங்கள் இருக்கும் கஷ்டத்தில் இதுவுமொன்று! என்னவாயினும் ஆபத்துக்காலத்தில் உதவிய பணத்தைக் கொடுக்க நாங்கள் பின்னிற்கிறவர்களல்ல.

சிங்கப்பூர்க்காரனுக்குப் பெண்ணைக் கொடுப்பதில்லை என்று சில கிழக்கோட்டான்கள் சபதம் செய்வதில் என்ன பயன். எங்கள் மாப்பிள்ளை மார்கள் இனிமேல் ஊரிலுள்ள பெண்ணைக் கட்டுவதில்லை. எப்போது பார்த்தாலும் "பில்" அனுப்பிக்கொண்டிருப்பார்கள். எங்கள் அண்ணன்மார்படும் கஷ்டத்தைப் பார்த்தபின் நாங்கள் எச்சரிக்கையாக இருக்க வேண்டுமென்று மேற்படி தீர்மானம் செய்துவிட்டார்கள். அத்துடன் எங்கள் அரசியல் திட்டங்களும் ஒரு மாதிரியாக இருப்பதாக வதந்தி. ஒரு சமயம் மூட்டை முடிச்சுடன் உவ்விடம் வந்தாலும் வரக்கூடும். ஏன் உங்கள் பிள்ளைகளை முற்றாக நீங்கள் இழக்க விரும்புவீர்களா? ஒரு சமயம் மலாயன் யூனியனில் பிரஜையாக இருக்க விரும்பாதவர்களை தாய்நாடு அகற்றிவிடவும் கூடும். அப்படியேற்பட்டால் உங்கள் பிள்ளைகள் உங்களிடம் வரவேண்டியது தானே.

சிங்கப்பூர்ப் பென்ஷன் எடுக்கும் ஐயாமாரே! உங்களைப்பார்த்து எல்லாரும் நகைத்தார்களாமே. இதை அறிந்ததுமே எனக்கு ஒரு மாதிரியாக இருக்கிறது. "காவோலை விழக் குருத்தோலை சிரிக்கிறதாம்!" இவர்கள் யூனியர் சீனியர் படித்ததெல்லாம் யாருடைய பணமாம். அடடா! உங்களுடைய நிழலிலே இருந்து உங்களையா பார்த்துச் சிரித்தார்கள். இவர்களெல்லாம் நன்றிகெட்டவர்கள். கூடிய சீக்கிரம் மேலும் அதிகமான பென்ஷன்காரரை அனுப்புகிறோம், உங்கள் கட்சியைப் பெலப்படுத்திக் கொள்ளுங்கள். கடந்த நான்கு வருடத்திற் பென்ஷனுக வேண்டிய பலர் யுத்த காரணமாக இதுவரை இளைப்பாறவில்லை. கப்பல் வசதிகள் வந்ததும் சட்டங்கள் நோர் பார்த்து 55 வயதுக்கு மேற்பட்டவர்கள் பென்ஷன் எடுப்பார்கள். பின் நீங்கள் பலம் அடைந்துவிடுவீர்கள். சிங்கப்பூர் வீழ்வதற்குச் சில நாட்களுக்கு முன் சிலர் அவசர அவசரமாகப் பென்ஷன் பெற்றுக்கொண்டும் இவ்விடத்திலே கையில் பிரம்புடன் உலாவுகிறார்கள். தயவு செய்து கொஞ்சக் காலத்திற்குத் தைரியமாக இருங்கள்.

எங்கள் தற்போதையவாழ்க்கை நிலைமையை அறிய விரும்புகிறீர்களா? ஒரு சமயம் அறிந்தால் இந்தப் பக்கம் வர நோக்கம் இருப்பவர்களும், எண்ணத்தை மாற்றிக்கொள்ளுவீர்கள். சென்ற நான்கு வருஷமும் நாங்கள் சாப்பிட்ட கேவரை எங்கள் நாட்டில் உள்ள எந்த ஏழையேனும் தனது சீவியகாலவரையந்தம் சாப்பிட்டிருக்கமாட்டான் என்பது எனது அபிப்பிராயம். அதைக் குறைத்துச் சாப்பிடக் காலம் இன்னும் வரவில்லை. இது சாப்பிட்டு வருவதால் நாகரீக நோயாகிய நீரிழிவு, முதலான சில ரோகங்கள் எங்கள் ஜனங்களிற் குறைவு. முன் பீடிக்கப்பட்டவர்களும் தற்சமயம் ஒருவாறு சௌகரியமாக இருக்கிறார்கள். அதற்கிடையில் பத்திரிகைகளில் தினம் வரும் விருந்தோ எங்கள் நாவில் ஜலம் ஊறச் செய்கிறது. அம்மட்டுந்தான். வயிறு நிறைந்தபாடில்லை. மரவள்ளிமா, குரக்கன்மா, சோளமா, சாப்பிட்டவருக்குக் கப்பல் கப்பலாகக் கோதுமைமா வருகிறது. இதோ வந்துவிட்டது என்று அறிந்தால் எப்படியிருக்கும்? நாவில் ஜலம் ஊறத்தான் செய்யும். மாவோடு நிற்கவில்லை, பலவகைச் சரக்குகள் வந்து இறங்குகின்றன என்றும் பலவிதமான பத்திரிகை விருந்துகள் எங்களுக்குக் கிடைக்கின்றன. அதிலும் ஒரு பெரிய வியாபாரி "முத்துச்சம்மா" அரிசி வேண்டுவோர் இப்போதே "ஓடர் செய்யவும்" என்றும் பிரசுரித்தார். இங்கு மிலிட்டரி அரசாங்கம் அனுமான் வால்போல் வளர்ந்து கொண்டேயிருக்கிறது. அப்பாடா எப்போதுதான் எங்களுக்கு உண்மையான விமோசனம் ஏற்படுமோ தெரியாது. கடவுளே நீயுமா பார்த்துக்கொண்டிருக்கின்றாய்!

**சிறம்பான், N. T. துரை**




தேக புனிதத்திற்காக
— எந்தெந்தக் காலத்திலும்!

தேக துர்நாற்றம் (B. O.) உண்டாவதற்குக் காரணமானதும், தேக புனிதத்தின் எதிரியுமான — கெட்ட வியர்வையிலிருந்து சருமத் துவாரங்களைக் காப்பாற்றுவதற்காகவே லைவ்போய் டொயிலட் சோப் விசேஷமாகத் தயாரிக்கப்பட்டது.

லைவ்போய்
டொயிலட் ஸோப்

LBT. 10-172 LEVER BROTHERS (CEYLON) LIMITED


# மொழித் தகராறு

ஈழநாட்டில் ஏற்பட்டிருக்கும் அரசாங்க பாஷைப் பிரச்சினை காரைக்குடியிலிருந்து வெளிவரும் குமரன் பத்திரிகை ஆசிரியரின் கவனத்தை ஈர்த்திருக்கின்றது. சிங்களமும் தமிழும் அரசாங்கமொழிகளாக வேண்டுமென்பது இலங்கை அரசாங்கசபையின் தீர்மானம். ஆகவே சிங்களமொழி அரசாங்கமொழியாக இருக்கமுடியாது. இலங்கையிலே தமிழின் ஆக்கத்தையுங் குறைக்க முடியாது. இங்குகாணப்படும் "மொழித் தகராறு" 'குமரன்' ஆசிரியரின் அபிப்பிராய —ப. ர்.

ஒவ்வொரு தேசத்திற்கும் ஒவ்வொரு மொழி இருக்கத்தான் செய்கிறது. அதற்குரிய மக்களின் அறிவிற்கும் பண்பாட்டுக்கும் அரசியல் உரிமைக்கும் தக்கபடி அது விரியவும் சுருங்கவும் செய்யும். உரம்பெறறும் மெலிவுற்றும் நிற்கும். தமிழ்மொழியின நிலையைப்பற்றி அதிகமாகக் கூறவேண்டியதில்லை. தமிழ்மக்கள் மிகப் பழமையானவர்கள். அவர்கள் மொழியும் பல பதினுயிரம் ஆண்டுகளாக வளம்பெற்று வந்தது. அவர்கள் நாகரிகம் பழமையும் பெருமையும் உடையது. அரசுரிமை வீழ்ச்சியாலும், அயலார் எதிர்ப்பினுலும் தளர்வு ஏற்பட்டபோதிலும் அதனுடைய பெருமைகள் மங்கி மங்கி ஒளிவிட்டுக்கொண்டுதான் இருக்கின்றன. அதன் பெருமைக்கு ஒரு சான்று யாவருமறிந்தது. சுமார் 2½ கோடிமக்கள் அதைத் தாய்மொழியாகக்கொண்டு பேசி வருகிறார்கள்.

தமிழ்மக்கள் பலர் மலாயாவிலும், பர்மாவிலும், சிலோனிலும் குடியேறி வசித்து வருகிறார்கள். அநேகம் தமிழ்க்குழந்தைகள் அங்கேயே பிறந்து வளர்ந்து அந்நாட்டு மக்களாகவும் உள்ளனர். இவர்களுடைய தமிழ் மொழி ஜனத்தொகை அதிகமாக இருப்பதன் காரணமாகக் கவனிக்கப் படவேண்டியது அவசியமாகிறது. மலாயாவில், அத் தேசத்தின் சொந்த மக்கள் மலாய்க்காரர்கள் என்றாலும் அவர்களுடைய தொகை மிகவும் சொற்பம். சீனர்களே அதிகம். அடுத்தபடியாகத் தமிழர்கள் இருக்கின்றனர். ஆகையால் மற்றப்பாஷைகளைப் புறக்கணித்து மலாய பாஷையைத் தலைமை யாக்குவது முடியாதகாரியமாகிவிட்டது.

பர்மாவில் பர்மியர் தொகை அதிகம். அடுத்தபடியாகத் தமிழர்தொகை இருந்துவருகிறது. விவசாயத்திலும் பிறகாரியங்களிலும் பர்மியரைப் போலவே தமிழ்மக்கள் பெரிதும் ஈடுபட்டிருக்கின்றனர். தமிழர்களுக்கும் சேர்த்து பர்மாவைத் தாய்ப்பாஷையாக்க அங்கு ஒரு குறும்புவேலை தொடங்கப்பட்டிருக்கிறது கணக்குகள் முதலியவை பர்மாவில் அல்லது ஆங்கிலத்தில் எழுதப் படவேண்டுமென்று அறிவிக்கப் பட்டது. இப்பொழுது பள்ளிக் கூடங்களில் பர்மா மொழியில் தான் அறிவுப்பாடங்கள் எல்லாம் வரும் என்று கூறப்படுகிறது.

இப்படியாகத் தமிழ்மொழியை நசுக்குவதற்குத் திட்டங்கள் வரிசைக்கிரமமாகப் புறப்படுவதுவருந்தத்தக்க காரியம்.

இந்தியாவிலிருந்து 20 மைல் தூரத்திலுள்ள இலங்கைத் தீவில் தமிழின் ஆக்கத்தைக் குறைக்க எடுக்கப்படும் முயற்சிகள் கிளம்புகின்றன. அங்குள்ள நம்மவர்கள் அதை எதிர்க்கின்றனர். சிங்கள மொழி அரசாங்க மொழியாக இருக்கவேண்டு மென்பது அங்கெழுந்துள்ள வாதம். மலாயாவைப்போலவோ, பர்மாவைப் போலவோ, உள்ளதன்று சிலோன் தீவு. தமிழ்த் தெய்வங்கள் பிறந்த — தமிழ் வீரர்கள் வாழ்கின்ற யாழ்ப்பாணம் இந்தத் தீவின் ஒருபகுதி என்பதை ஞாபகப் படுத்திக்கொள்ள வேண்டும். தமிழ் நாட்டின் அடுத்தவாயிலாக அது விளங்குகிறது என்பதையும் மறந்துவிடக்கூடாது.

சிங்களந்தான் தலைமைதாங்க வேண்டுமென்று கூறுகிறவர்களுக்குப் பதிலாக, பொது ஜனங்களின் சார்பாக ஆறு நியாயவாதிகளும், ஒரு ஆசிரியரும் ஒரு அறிக்கை விடுத்திருக்கின்றனர். அதில் சிங்களமும், தமிழும் அரசாங்கபாஷைகளாக அமையவேண்டும் என்று ஆதாரங்களுடன் கூறியிருக்கின்றனர். இவர்களுள் சிங்களவர்களும் உண்டு. பள்ளிக்கூடங்களில் சிங்களமும் தமிழும் படிக்கவேண்டுமென்று கருதுகின்றனர். திரு. குமாரசிங்கம் என்பவர் ஒரு கருத்தை வெளியிட்டிருக்கிறார். அதாவது சிங்களத்தை அரசாங்க மொழியாகக் கொள்வதனுல், தமிழை எல்லாருக்கும் கட்டாயப்பாடமாக்குவது அவசியம் என்று அவர் கூறினார். இதுவும் கவனிக்கத்தக்க ஒரு விஷயமாகும்.

## 229-வது புடவைக் கட்டுப்பாட் டறிவித்தல்

198-வது இலக்கப் புடவைக் கட்டுப்பாட்டறிவித்தல் தொடர்பாகக் குருநாகலில் உள்ள 'மெஸர்ஸ் ஜெனரல் டிறேப்பரி ஸ்டோர்ஸ்' இந்திய புடவைகள் விற்க மொத்த வியாபாரப்பங்கீட்டுக்காரராகப் பெற்றிருந்த உத்தரவு தள்வு பெற்றுள்ளது. இவ் உத்தரவு நீக்கம் 28-3-46 துவக்கம் வலுவுடைத்து. இவர்களிடமாக குருநாகலில் உள்ள மெஸர்ஸ் ஜமாலியா ஸ்டோர்ஸ் நியமனமாகியுள்ளது. இவற்றை எல்லார்க்கும் அறியத்தருகிறோம்.

[illegible]
புடவைக் கட்டுப்பாட்டதிகாரி
கொழும்பு, 30-3-1946. [2726]


SAMUEL SONS & Co., Ltd.,
HOSPITAL ROAD, JAFFNA
T'GRAM: ECHIRON T'PHONE: 62
Head Office:- 371, OLD MOOR ST.,
COLOMBO

● இரும்பு
கம்பிகள்
கேடர்கள்
சிலாகைகள்
அச்சுகள்
தகடுகள்

○ நீர் இறைக்கும்
யந்திரங்கள்
குழாய்கள்
தாங்கிகள்

○ கல்வனைஸ்
தகடுகள்
தாங்கிகள்
வாளிகள்

● கைத்தொழிற்குரிய
ஆயுதங்கள் மற்றும்
கமத்தொழிற்
கருவிகளும்

● பித்தளை
தகடுகள்
• பூட்டுகள்
• பிணைச்சல்கள்

○ மைவகைகள்
மை எண்ணெய்
வாணிஸ்

சகாயமான விலைக்குப் பெற்றுக்கொள்ளலாம்
இலவச விலை விபரங்களுக்கு எழுதவும்

சாமுவேல் சன்ஸ் & கம்பெனி லிமிரெட்
ஆஸ்பத்திரிரோட் : : யாழ்ப்பாண[illegible]
தந்தி: 'எச்அயர்ன்' 'போ[illegible]
(2711)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுகதை

# மலாயாக் கடிதம்

— ரா. க. —

ஆபீஸ் பையன் கடிதங்களையெல்லாம் ஒவ்வொருவருடைய மேசைகளிலும் வைத்துச் சென்றான். அவசர அவசரமாக எனக்கு வந்த கடிதங்களைப் புரட்டினேன். ஒன்று சிங்கப்பூரிலிருந்து வந்திருந்தது. ஒரே குதூகலம். என்னருமைச் சகோதரன் கடிதந்தான் அது. கையெழுத்து, விலாசம். எல்லாவற்றிலுமிருந்து அறிந்துகொண்டேன். சிங்கப்பூரைப் பிரிட்டிஷார் திரும்பவும் பெற்ற நாட்டொடக்கம் ஆவலுடனும், ஏக்கத்துடனும், உற்றார், உறவினர்களின் கடிதங்களை யாழ்ப்பாணத்தில் ஒவ்வொருவரும் காத்திருந்த காலமல்லவா?

சிலர் தந்தி கொடுத்திருந்தார்கள். சிலர் ஆகாய விமானங்களில், சண்டைக் கப்பல்களில் வந்த ஆங்கில நண்பர்கள் மூலம் கடிதங்கள் கொடுத்துவிட்டிருந்தார்கள். அவற்றால் ஊரில் ஒரே அமர்க்களம். 'குசு, குசு' பேச்சுகளுக்கு எல்லையில்லை. 'சிங்கப்பூரில் அநேகர் இறந்துவிட்டனராம். சிலருக்குக் காலில்லையாம். சிலரைச் சீனக் கொள்ளைக் கூட்டத்தினர் தூக்கிச்சென்று விட்டனராம். சிலரைக் 'கொமியூனிஸ்ற்' கட்சியினர் கொன்றுவிட்டார்களாம். யப்பானிய அதிகாரவர்க்கத்தார் சிலரைச் சித்திரவதை செய்துவிட்டனராம். பலர் சிறைச்சாலைகளில் உணவு, உடையின்றி வாடி வதங்குகின்றனராம். வேறு பலர் சுபாஷ் போஸின் இந்திய தேசீய ராணுவத்திற் சேர்ந்திருக்கிறார்களாம். இப்படிப் பல கதைகள்.

பஞ்சம், நோய், கொலை, களவு, நரசோரம், வதை என்பன எல்லாம் அந்த நாட்டில் மலிந்து கிடக்கக் கேட்ட யாழ்ப்பாண மக்கள் ஒவ்வொருவருக்கும் தங்கள், தங்கள் உறவினரைப் பற்றிக் கவலைதானே. 'விவாகம் செய்யாதவர்களையெல்லாம் பட்டாளத்தில் சேர்த்துவிட்டார்களாம். சேர மறுத்தவர்கட்கெல்லாம் கடுந்தண்டனை' யென்றுங் கேள்விப்பட்ட எனக்கு அண்ணரின் கடிதத்தை உடைத்து வாசிக்கவும் மனங் கூசியது. அடுத்த மேசையில் இருந்து வேலைசெய்த நண்பன் கணபதியைப் பார்த்தேன். அவரும் கடிதங்களுடன் பிசைந்துகொண்டிருந்தார். ஆம். மலாயாக் கடிதங்களுடன்தான்.

அண்ணரின் கடிதத்தை வாசித்ததில் எனக்கு ஒரு அளவுக்குத் திருப்தி. யப்பானியர் விவாகஞ் செய்யாதவர்களையெல்லாம் பட்டாளத்தில் சேர்க்கிறார்கள் என்ற பீதி அங்கும் இருந்ததாம். உடனே யாழ்ப்பாணத்தாரெல்லாம் சேர்ந்து ஓர் இரகசிய உடன்படிக்கை செய்துகொண்டார்களாம். அகப்பட்ட பெண்ணுக்கும், வசதியான இளைஞர்க்கும் விவாகஞ் செய்துவைப்பதென்பது தான் இவ்வொப்பந்தம். பெண் பெற்றவர்கட்கெல்லாம் பெரிய சந்தோஷம். "இருந்தாலும் இருந்தோம். உணவு, உடைக் கஷ்டம், குண்டுவீச்சுப் பயம், அதிகாரவர்க்கத்தின் கொடுமை, நோய், துன்பம், கொள்ளைக் கலக்கம் எல்லாம் அனுபவித்தோம். காரியமில்லை. யாழ்ப்பாணத்தில் எங்கள் உறவினர்களை எண்ணி ஏங்கினோம். இப்போதுசீதனமில்லாமல் வசதியாக எங்கள் பெண்களுக்கு விவாகம் வாய்த்தனவே. யாழ்ப்பாணத்தில் சென்று அலைந்து தாலி, கூறை, கலியாணச் செலவு, மாப்பிள்ளையின் தகப்பன் கடன், தாய்க்கு நகை, சகோதரியின் சீதனம் என்ற இன்னோரன்ன வரிசைகளைக் கொடுத்தும் ஒரு நல்ல மாப்பிள்ளை எடுக்க முடியுமோ என ஏங்கித் தவித்தோம். இறைவன் கருணை கூர்ந்து எங்களுக்கு இந்த ஊரில் இவ்வளவு கஷ்டங்களுக்கிடையில் இந்த நன்மையையேனும் செய்தாரே," என்று ஏதோ ஆறுதலடைந்தனராம். ஒருநாளைக்கேனும் தங்கள் பிள்ளைகள் சந்தோஷமாயிருந்தால் போதுமென்பதே அவர்களின் சித்தாந்தம். அண்ணன் கலியாணமும் இந்த அழகில் நடந்தேறியதாம்.

நல்ல காலம், எங்கள் தகப்பனார் இறந்துபோனார். சீதன விஷயம் அவர் வயிற்றெரிச்சலைக் கிளறியிருக்கும். ஊர், சாதி, சனம் என்பனவற்றை அவர் சகித்துக் கொள்ளார். நிச்சயமாக அண்ணரைத் திட்டிக் கடிதம் எழுதியிருப்பார். பெண்ணுடன் யாழ்ப்பாணம் வரவிடுவாரோ என்பது ஒரு பிரச்சினையாகி விடும். தாயார் புறுபுறுப்பார். 'பிறகு சண்டை பிடித்தாலும், புது மருமகளைக் காண எந்தப் பெண்ணுக்குத்தான் பிரியம் இராது.' எனக்கு உள்ளூர மகிழ்ச்சி. வேறு ஒன்றுமல்ல. அண்ணரைச் சாட்டிப் பின்போடப்பட்ட எனது கலியாணத்துக்கு "இனியென்ன தடை," என்பதுதான். இந்த மகிழ்ச்சியில் கந்தோர் வேலை நடந்துகொண்டிருந்தது. மத்தியான லீவு – கணபதியை அழைத்துக்கொண்டு வழக்கம் போல, ஆனந்தபவன் ஹொட்டலுக்குக் கிளம்பினேன்.

## II

நண்பன் கணபதி கடிதம் வாசித்து முடிந்தபாடில்லை. அவன் மனங்கலங்கிய நிலையை முகம் வடிவாகக் காட்டியது. அவனுக்கும் அதே மலாயாக் கடிதம். சகோதரியிடமிருந்து வந்தது. அவனின் ஒரே சகோதரி தையல்நாயகியை நான் அறிவேன். நாங்கள் இந்துக் கல்லூரியில் படிக்கிற காலம். கணபதியுடன் அவர்கள் வீட்டுக்கு அடிக்கடி செல்லுவேன். உதைபந்தாட்டக் கோஷ்டியில் நாங்களிருவரும் சேர்ந்திருந்தோம். கணபதிதான் அவ்வருடத் தலைவன். அவ்வருடம் சீனியர் பரீக்ஷையைப் பற்றி எங்களுக்கு அக்கறை குறைவு. சம்பத்திரிசியார் கல்லூரியுடன் நடக்கும் பந்தாட்டத்தில் வெற்றி எப்படியும் எடுக்கவேண்டுமென்றுதான் அவா. ஐப்பசி மாதம். கணபதி பந்தாட்டத்துக்கு அன்று வரவில்லை. விசாரித்த அளவில் மைத்துனன் ஒருவர் மலாயாவிலிருந்து வந்திருக்கிறாரென்றும், அவனுடைய சகோதரிக்கு விவாகம் நடத்த உத்தேசம் என்றுந் தெரிந்தது. இதனால் அவன் பந்தாட்டத்திலிருந்தும் ஒரு கிழமைக்கு ஓய்வு பெற்றது நூதனமல்ல.

"அநேக காலமாகக் குமராக இருந்த பெண். இப்போது ஒருவர் சிங்கப்பூரிலிருந்து ஆறுமாத லீவில் வந்திருக்கிறார். ஏராளமான பொருள் கொண்டுவந்து நல்லாகச் செலவழிக்கிறார். சொற்ப குடிகாரன் போலே! 'யார் உங்கே குடிப்பதில்லை? அவருக்கு ஏதோ பெரிய ஸ்டேசனில் வேலையாம். நல்ல வரும்படியுமாம். கணபதியின் தகப்பனுக்கு நல்ல கொடுத்துவைத்த சம்பந்தம்." என்று எங்கள் வீட்டிலேயே பேசிக்கொண்டனர். விவாகதினத்தன்று ஒரே தடபுடல். கலியாணப் பந்தர் நாலு மணவறைகளுடன் பொலிந்தது. நல்ல திறமான ஐந்து கூட்ட மேளம். "கூழாவடி" சோடி வெள்ளைக் குதிரைகள் பூட்டிய அலங்கார ரதத்தில் மணமக்கள் ஊர்வலம். பட்டாசு அதர்வெடிகள் காதைத் துளைத்தன. வாண விளையாட்டுக்கள் வேறுபக்கம். அதிகம் ஏன்? 'வாசலில் கட்டியிருந்த இரண்டு வாழைக்குலைகளையும் மரத்துடன் எப்படிப் பழுக்கவைத்தெடுத்தார்கள்,' என்று பலரும் பேசிப் புகழ்ந்தனர். அன்று பகல் முகூர்த்தத்துக்குத் தாலி கட்டியும், மாப்பிள்ளை பெண்ணை அழைத்து வீடு சேர விடிந்துவிட்டது. பந்தலுக்குள் கம்பளங்களில் படுத்து நித்திரையாய் விட்ட என்னை விடியத்தான் எழுப்பினார்கள். நாலாஞ் சடங்குக்கு நல்ல பெரிய ஆட்டுக்கடா, சாராயம் எல்லாம். இரவு சதிர்க்கச்சேரி. சிங்கப்பூர் மாப்பிள்ளைகளுக்குத்தான் பெண் கொடுக்கவேண்டுமென்று அங்கு நின்ற இழவிகள் கூடப் பேசிக்கொண்டனர். இப்போது 18 வருடங்களுக்கு முன் சிங்கப்பூரை யப்பான் "சோனான்" ஆக்குவானென்று யார் எண்ணினர். அது ஒரு காலம்.

## III

கணபதியைத் தட்டினேன். மத்தியானம் சாப்பிட நேரமாய் விட்டது என நான் கூறியே அவன் அறிந்தான். அவனுக்குக் கதைக்க வரவில்லை. சகோதரியின் கடிதத்தை என்னிடம் கொடுத்தான் – பதட்டத்துடன் விரிததுப்படித்தேன்.

உ

சிவமயம்

படுக்கைநம்பர் 8
பெரிய ஆஸ்பத்திரி
கோலாலம்பூர் — 4-11-45

இறைவனருளை முன்னிட்டு வாழும் என்மேல் அன்புள்ள சகோதரன் கணபதிக்குச் சர்வமங்களமும் உண்டாவதாக. இவ்வளவு காலமும் எங்கள் கடிதங் காத்திருந்த உங்களுக்கு இந்தப் பாவி, தனியே கயரோக ஆஸ்பத்திரியில் கிடந்து தன் அந்திய காலத்தில் இதை எழுத வேண்டி வந்ததற்குப் பெரிதும் வருந்துகிறேன். இவ்விதம் கடிதம் எழுதுவேனென்று காத்திருக்கவில்லை. ஏதோ புண்ணிய வசத்தால் இவ்வளவு வசதியாகிலும் வந்தது எனது பிள்ளைகள் செய்த தவந்தான். இன்னும் வாரங்களோ, நாட்களோ என்ற கணக்கில் எனக்கு இவ்வுலக வாழ்வு எஞ்சியிருக்கிறது. என் அருமைக் கணவர், 'எங்கள் மச்சான்' இப்போ ஒரு வருடங்களுக்கு முன் இதே ஆஸ்பத்திரியில் கயரோகத்தால் மாண்டுபோனார். அவரது சொற்ப குடிப்பழக்கம் யுத்தகாலத்தில் பல இடைஞ்சல்களால் நாளாந்தம் கூடிவந்தது. குடிக்கேற்ற விதமாக நல்ல உணவு அவருக்குக் கிடைக்கவில்லை. யப்பானிய அரசாங்கத்தாரின் பல நெருக்குதல்கள், வேலைஸ்தலத்தில் ஆகாய விமானக் குண்டுகளின் பயம். உணவில்லாமல் இரவு, பகலாக உறக்கமில்லாத வேலை. யப்பானிய பொலீஸ், அல்லது சீனக் கொள்ளைக் கூட்டம், அல்லது வேறு ஆள்தூக்கிக் கூட்டங்கள் வீட்டில் என்னசெய்து விட்டார்களோ என்ற ஏக்கம். யாழ்ப்பாணத்தில் கிழட்டுத் தாய், தகப்பன் எப்படிக் அந்தியகாலத்திற் கஷ்டப்படுகிறார்களோ என்ற கவலை. குடும்பத்தைப்பாதுகாக்க வேண்டிய பொறுப்பு, பிள்ளைகள் படிப்பின்றித் திரிகின்றார்கள் என்றதுக்கம் இந்த இரண்டு இளம்பெண்களையும் எதிர்காலத்தில் என்ன செய்வது. குமர்ப் பிள்ளைகளல்லவா? ஊரில ஒரு வீடுதானும் கட்டி விட்டேனில்லையே என்ற யோசனை ஒரு பக்கம்.

துக்கத்தைத் தீர்க்கக் குடிகூடினது. மரவள்ளிக் கிழங்கை விட உணவு பெரும்பாடுதான். இந்த நிலைபரத்தில் ஒரு இருமல் தொடங்கியது. ஆள் மெலிந்து வந்தது. ஆரம்பத்தில் யப்பானிய விமானங்கள் தாக்கினபோது, ஒரு இரும்பாணி பறந்து காலில் தாக்கினது. சிகிச்சையால் எல்லாம் மாறியிருந்தது. கஷ்டகாலத்துக்குப் போலும், பிறகு கொதிவலியுடன் வேதனை கொடுக்கத் தொடங்கியது. எக்ஸ்ரே செய்து பார்த்ததில் காலுக்குள் ஒரு சிறு துகள் இரும்பு இருந்துதான் இப்படி ஆரம்பித்ததென்று கூறினர். பிறகு உள்ளுக்கு அழுகல் தாவினது என்றும், நீரிழிவுமிருப்பதால் மாற்றுவது கஷ்டமென்றுங் கூறினர். ஈற்றில் டாக்டர்கள் கால் கழற்றுவதெனத் தீர்மானித்தனர். வயிற்றுக்கோளாறு ஆரம்பித்தது. அதற்குக் காரணம் பற்களென பல் வைத்திய நிபுணர்கள் பற்களைப் பிடுங்கி விட்டனர். இவற்றையெல்லாம் ஒருவிதமாகச் சகித்துக் கொண்டிருக்கும் போது, ஒருநாள் இருமித் துப்பினார். இரத்தத்துடன் சளி கண்டது. சீ! என்ன வாழ்க்கை!!

டாக்டர்கள் கசம் என்றனர். பிறகு படிப்படியாக அவர் உருக்குலைந்துபோய், ஈற்றில் எங்களைத் தவிக்கவிட்டுச் சென்றுவிட்டார். தம்பி! நாங்கள் பட்ட கஷ்டங்கள் [illegible] தகப்பன் இறந்ததும் பிள்ளைகள் ஏங்கி விட்டனர். எனக்கு ஒரு வலிப்பு, விறைப்புப்போல, அன்று நடந்தன அதிகம் தெரியாது. அடுத்த அயல் வீட்டு யாழ்ப்பாண அன்பர்கள் அன்றைய்க் கருமங்களைச் செய்தனர். நல்ல காலமாக வீட்டில் இரண்டு பசு மாடுகள் நின்றன. பால்கறந்து விற்றும், சிறுவேலைகள் செய்தும் எனது இளையபாலன்கள் இரண்டும் பிழைத்துவந்த பணத்தைக் கொண்டு உயிர் வாழ்ந்தோம். சரியாக ஒரு மாதங்கழித்து எனக்கும் இருமல் கண்டது. வீட்டிலிருந்து பார்த்தோம். சரிவருவதாயில்லை. ஆஸ்பத்திரிக்கு வந்தும் 4 மாதங்களாகின்றன. பிள்ளைகளை அடுத்த வீட்டில் ஆட்களுடன் விட்டுத்தான் வந்தேன்.

நான் ஆஸ்பத்திரியிலிருந்து வீடு திரும்புவேனென்று நம்பவில்லை. ஐயோ என் பிள்ளைகள் கதி என்ன என்றுதான் விளங்கவில்லை. ஆகையால் தம்பி! கப்பல் வசதி வந்ததும் குழந்தைகளை உவ்விடம் அழைத்துப் பாதுகாத்துக் கொள்ளவும். எனக்கு அப்பு தந்த சீதனங்களைத்தான் எனது இரண்டு பெண் பிள்ளைகட்கும் பிரித்துக் கொடுத்து எங்கேயாகிலும் நல்ல கலியாணஞ் செய்து வைக்கவும்' பையன்களுக்கு உவ்விடம் இலவசக்கல்வி வசதியுண்டென்று பேசிக் கொள்ளுகின்றனர். அப்படியானால் ஏதோ இரண்டு சொல்லுப் படிக்கவைத்து நீரும் வேண்டிய உதவிகளைச் செய்து அவர்களை மனிதராக்கி விடும். வேறுநான் என்ன சொல்வது. இவ்வளவும் நான்சொல்ல எனது மூத்த மகள் எழுதினாள். இனி என்னால் முடியாது. இறைவன் உங்களைக் காப்பாராக!


அன்புள்ள சகோதரி
தையல்நாயகி

கணபதியின் தங்கையின் கடிதம் வாசிக்கமுன் என் கண்களுங் கலங்கி விட்டன. இன்னும் என்னதான் மனிதனுக்கு வரவேண்டும். "காத்திருந்த சகோதரியின் கடிதம், மச்சான்" என்று கணபதி விம்மி விம்மியழுதான்.

## 230-ம் இலக்கப் புடவைக் கட்டுப்பாட்டு அறிவித்தல்

எக்காரியத்தின் பொருட்டென்றாலும் பிறருடைய புடவைக் கூப்பன் புஸ்தகங்களைச் சேகரிக்கும் வியாபாரிகள், வியாபாரத் தகுதிப் பத்திரத்தை (license) த் தொடர்ந்து வைத்திருக்க அருகதை அற்றவர் என்று எம்மாற் கொள்ளப்படுமென்பதை வியாபாரிகட்கு இத்தாலறியத் தருகிறோம்.

ஈ. ரெட்றிக்கோ
புடவைக்கட்டுப்பாட்டதிகாரி
கொழும்பு, 11-4-46
[2730]


—இதற்குப் பதிலாக வாங்குவதற்கு எவ்வளவு செலவாகுமென யோசித்துப் பாருங்கள்

இப்போது ஆடைகள் விற்கும் விலையில் வண்ணானை ஆடைகளைத் தோய்த்துப் பொத்தல்களை உண்டாக்கவிடுவது, பணத்தை வீண் விரயஞ் செய்ததுபோலாகும். இவ்விதமாக முரட்டுத்தனமாய் நாசமுண்டாக்கக்கூடிய முறையில் ஆடைகளை வெளுக்கவேண்டியதில்லை. சன்லைட் சோப்பினால் ஆடைகளிலிருந்து மிருதுவாக அழுக்கை நீக்கிவிடலாம். சன்லைட்டில் சுய ஆற்றலுள்ள நுரையிருக்கின்றது. அதனால் நூலிழைகளை பாதிக்காதவாறு அது அழுக்கைத் தூக்கி எடுத்துவிடுகிறது. சன்லைட் முறையில் ஆடைகளை வெளுக்க இன்றே ஆரம்பியுங்கள்; அதனால் உங்கள் ஆடைகளை நீடித்து நிற்கச் செய்யுங்கள்.

**உங்கள் வேலைக்காரனுக்குச் சன்லைட் சோப்பை உபயோகித்துப் பணத்தை மிச்சப்படுத்தும் முறையைக் கற்பியுங்கள்.**

1. ஆடைகளைத் தண்ணீரில் நன்றாக ஊற வையுங்கள்.
2. ஆடைகள்மீது—அழுக்குப் படிந்த இடத்தில் மேலதிகமாக — சன்லைட்டை நன்றாகத் தேய்க்கவும்.
3. சோப் ஆடைகளுள் செறியும்படி மிருதுவாகத் தப்புதல்வேண்டும். அவைகளை அடிக்க வேண்டாம். சன்லைட்டின் 'சுய ஆற்றலுள்ள' நுரை அழுக்கை இழக்கி எடுத்துவிடுகிறது.
4. நன்றாக அலசிக் கழுவவும். இப்பொழுது அழுக்கு சன்லைட் நுரையிலேயே இருக்கிறது. ஆனபடியால் எல்லாவற்றையும் அலசிக் கழுவி வெளியேற்றவும். நன்றாக அழுக்கடைந்த ஆடைக்கு இன்னொருமுறை சோப் போடவேண்டும்.




# சன்லைட் சோப்
## உடைகளைப் பாதுகாக்கிறது

S. 71-169 LEVER BROTHERS (CEYLON) LIMITED


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

NATIONALIST TAMIL WEEKLY

# THE EELAKESARI

Largest and most Influential Circulation in Ceylon & India

Vol. 16 | Chunnakam, Sunday April, 21, 1946 | No. 37


## நற் சுகத்திற்கு




எங்களிடம் P. S. R. சந்தனுதித் தைல வகைகளும் விற்பனைக் கிருக்கின்றன.

[2713]


## மன்னர் ஆசிரியர் விடுமுறைக் கழகம்

மேற்படி கழகம் 28-3-46ல் மன்னார் அர்ச் சவேரியார் கலாசாலையில் வட்டார வித்தியாதரிசி அவர்கள் தலைமையில் ஆரம்பமாகி 30-3-46 ல் முடிவெய்தியது. கழகத்தில் பல அறிஞர்களால் இலக்கியம், சரித்திரம், பாஷை, பூமிசாஸ்திரம் முதலிய பாடங்கள் கற்பிக்கும் முறைகள், பாலரைப் பயிற்றுவதில் அகநூல் ஆசிரியர்களின் துணிவுகள், தலைமையாசிரியர்களின் கடமைகள், பரீட்சைகளைத் தரப்படுத்தும் முறைகள் முதலிய இன்னோரன்ன விஷயங்களில் விரிவுரைகள் நிகழ்த்தப்பட்டன. ஒவ்வோர் விஷயத்திலும் கலந்துரையாடல் விசேஷ இடம்பெற்று அதன் மூலம், ஆசிரியர்கள் அனுபவவாயிலாக அறிந்த பல உண்மைகள் நன்கு விளக்கம் பெற்றன.

இப் பத்திரிகையில் வெளியாகும் ஹாஸ்யக் கட்டுரைகள், கதைகளில் வரும் பெயர்கள் கற்பனைப் பெயர்களே. கட்டுரையாளர் அபிப்பிராயங்களுக்குப் பத்திராதிபர் உத்தரவாதியல்லர்.

## வல்வெட்டித்துறை இலவச வாசிகசாலை

### மூன்றும் ஆண்டுவிழா

#### தமிழ்நாட்டு எழுத்தாளர் விஜயம்?

வல்வெட்டித்துறை இலவச வாசிகசாலையின் மூன்றும் ஆண்டு விழா இன்று, (21-4-46) நாளையும் நிகழவிருக்கின்றது. திருச்சியிலிருந்து "சிவாஜி" வாரப் பத்திரிகையைச் சேர்ந்த ஸ்ரீ திரிலோக சீதாராமும் ஸ்ரீனிவாசராகவன் அவர்களும் பேச்சாளர்களாகவிருப்பார்கள் என்று தெரிகின்றது. திங்கட்கிழமை பிற்பகல் 4-30 மணிக்குத் திருப்புகழ்மணி கிருஷ்ணசாமி ஐயர் அவர்கள் பேசுவார்கள். இன்று விழா மாலை 6 மணிக்கு ஆரம்பமாகும்.

## புலோலித் தமிழ் இளைஞர் கழகம்

### இரண்டாவது ஆண்டு நிறைவு விழா

நாளது சித்திரைத் திங்கள் சித்திரா பூரணை அன்று (16-4-46) செவ்வாய்க்கிழமை மாலை 6 மணி தொடக்கம் மேற்படி கழக நிறைவுவிழா புத்தளைச் சைவப் பாடசாலையில் டாக்டர் கு. சிவப்பிரகாசம் எம். எஸ். சி; பி. எச். டி. அவர்களின் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது. அத்தருணம் "இக்காலக் கல்வியுலகம்" "தொண்டர் பெருமை", "கிராமச் சீரமைப்பு" என்னும் விஷயங்கள் பற்றி முறையே, வித்துவான் பொ. சிவப்பிரகாசம் அவர்கள், பண்டிதர் பொ. கிருஷ்ணபிள்ளை அவர்கள், பண்டிதர் நாக. மைவண்ணன் அவர்கள், சொற்பொழிவாற்றினர்கள். இடையிடையே இன்னிசைக் கச்சேரியும் நடைபெற்றது.


## 231-வது இலக்க புடவைக் கட்டுப்பாட்டு அறிவித்தல்

198-ம், 224-ம் புடவைக்கட்டுப்பாட்டறிவித்தல்கள் சார்பாகப் பின்வரும் வியாபாரிகளின் வியாபார நாட்கள் திங்கட்கிழமைகளில் என்பதையும் வெள்ளிக்கிழமைகளில் அல்ல என்பதையும் அவதானிக்கவும்.

மெஸர்ஸ் எஸ். பீ. பீர்முகம்மது அன்ட் கோ, மட்டக்களப்பு
லத்தீவ் ஸ்டோர்ஸ், மட்டக்களப்பு

ஈ. ரெட்றிக்கோ
புடவைக்கட்டுப்பாட்டதிகாரி
கொழும்பு, 12-4-46 [2731]


## சிங்கப்பூர் உணவு மகாநாடு

### தென்கிழக்காசிய நாடுகளின் அவல நிலை

தென்கிழக் காசியாவிலுள்ள உணவு நெருக்கடியை வாஷிங்டனிலுள்ள கூட்டு உணவு சபை முன்பு ஆலோசனைக்கு உடனே கொண்டு வரவேண்டியதின் அவசியத்தை திங்கட்கிழமை யன்று கூடிய உணவு மகாநாடு பிரிட்டிஷ் அரசினருக்கு நன்கு எடுத்துக் கூறியிருக்கிறது.

சிங்கப்பூர் உணவு மகாநாட்டு அறிக்கை யென்று கூறுவதாவது :—

கூட்டுஉணவுச் சபை தென்கிழக்காசிய நாடுகளுக்குத் தற்காலிகமாக ஒதுக்கியுள்ள பங்கீடுகளைப்பற்றி மகாநாடு ஆலோசனை செய்தது. மேலும் உலகில் உணவு நிலைமை பொதுவாக அபிவிருத்தி அடைந்து வருவதாக மற்ற நாடுகளில் வெளியான அறிக்கைகளையும் தென்கிழக்காசிய நாடுகளை உதாசீனம் செய்வதால் தான் உலகின் மற்ற பாகங்களில் உணவு நிலைமை அபிவிருத்தியடைந்துள்ளதென்ற தென்கிழக்காசிய நாடுகளில் காணப்படும் அபிப்பிராயத்தையும் மகாநாடு ஆலோசனைக்கு எடுத்துக் கொண்டது.

தென் கிழக்காசிய நாடுகளுக்கு ஒதுக்கப் பட்டிருக்கும் பங்கீடுகளில் வெட்டு ஏதாவது ஏற்படாமல் பார்த்துக் கொள்ளவும் மேலும் பங்கீடுகளை அதிகரிக்கவும் மகாநாடு தன்னால் இயன்றவரை பாடுபடும்.

தென்கிழக்காசியாவில் போஷணை குறையாமல் பார்த்துக்கொள்ள பல்வேறு நாடுகள் எடுத்துக் கொள்ளப் பட்டிருக்கும் நடவடிக்கைகள் பற்றிய தகவல்களை பரிமாறிக்கொள்ள மே மாதத்தில் சிங்கப்பூரில் போஷணை நிபுணர்கள் மகாநாடு ஒன்று நடத்த முடிவு செய்யப் பட்டிருக்கிறது.

மகாநாடு மேலும் போக்குவரவு சாதனங்களைப் பலப்படுத்தல், ஆஸ்திரேலியாவிலிருந்து பதனிடப்பட்ட உணவுப் பொருள்களை இறக்குமதி செய்தல் போன்ற விஷயங்களைப் பற்றி ஆலோசனை செய்தது.

இம் மகாநாட்டிற்கு கில்லோர்ன் பிரபு தலைமை வகித்தார். இலங்கை சார்பாக இலங்கை கவர்னர் சேர் ஹென்றி மூரும் விவசாய மந்திரி திரு. டி. எஸ். சேனநாயகாவும் இம் மகாநாட்டில் கலந்து கொண்டனர்.

## கண்டித் தமிழாசிரியர் நினைவுறுத்தற் கழகம்

கண்டி வட்டாரத் தமிழாசிரியர்க்கு ஓர் நினைவுறுத்தற் கழகம் 25-3-46 தொடக்கம், கண்டி லேடி கோர்டன் அரசினர் பாடசாலை மண்டபத்தில் கண்டிப் பகுதி வித்தியாதரிசி திரு. T. J. இம்மானுவேல் அவர்களால், தொடர்ந்து ஐந்து நாட்களாக நடாத்தப்பட்டது.

இலங்கைப் பல்கலைக் கழகத் தலைமைத் தமிழ்ப் பேராசிரியர் சுவாமி விபுலானந்தா அவர்கள் திறப்பாளராக விருந்து "கல்வியின் மறுமலர்ச்சி" "இளைஞர்க்கான இலக்கியக்கல்வி" என்பனவற்றைப்பற்றி அரிய விரிவுரைகள் நிகழ்த்தினார்கள். அரசாங்க சபைப் பிரதிநிதி திரு. A. ரத்நாயக்க அவர்கள் இலவசக் கல்வி சம்பந்தமாக ஓர் அரிய விரிவுரை நடாத்தினர்.

இலங்கையின் பலபாகங்களிலுமிருந்துவந்த வித்தியாதரிசிமார், ஆசிரியர்கலாசாலைப் பேராசிரியர்கள், பண்டிதர்கள், ஐக்கியசங்கப் பாடசாலைப் போதகாசிரியர், சாரண இயக்கத் தலைவர், வைத்திய அதிகாரி முதலியோரால் கல்வி, கலை, சமூகம் பற்றிய பல விரிவுரைகள் நிகழ்த்தப்பட்டன.

ஆசிரியர்களின் ஆனந்தமான களியாட்டங்களும், கண்டி ரினிற்றிக் கல்லூரி மாணவரின் சாரணமாதிரி வேலைகளும், மெச்சப்படத்தக்க முறையில் நிகழ்ந்[illegible] வித்தியாதரிசி திரு. S. K. இராசசிங்கம் அவர்களின் நிறைவுரையுடன் கழகம் இனிது கலைந்தது.

## இராமஇராச்சியம்

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

வேண்டும் என்பது தோன்ற 'முறையறிந்து' என்றார். முறை என்பது செங்கோன்மை எனவும் பொருள்படும்.

ஓர்ந்து கண்ணோடாது
இறைபுரிந்து யார்மாட்டும்
தேர்ந்துசெய் வஃதே முறை

என்பது திருக்குறள். இனி, தீங்கு கண்டவிடத்து அரசன் முனிதல் வேண்டும் எனவும், அம் முனிவும் தன் நலங்கருதியதாக இருத்தல் ஆகாது எனவும் கருதி அவாவை நீத்து முனிவுழி முனிந்து' என்றார். அரசிறையாகக் குடிகளிடத்துப் பெறவேண்டிய பொருளைக் குடிமக்கள் விருப்பத்திற்கிணங்க, அளவிட்டறிந்துகொள்ள வேண்டும் என்பார். 'வெஃகும் இறையறிந்து' எனவும் இவ்வாறு குடிமக்கள் நலங்கருதி அரசு புரியும் மன்னனுக்கே இம்மைப் பயனாகிய புகழும் மறுமை நலமும் உண்டாம் என்பது தோன்ற உயிர்க்கு நல்கும் இசைகெழு 'வேந்தன்' எனவும் கூறினர்.

பசி, பிணி, பகை என்னும் இம் மூன்றும் தன் நாட்டிற்கு நலிவு நேராவாறு காப்பாற்ற வேண்டியது அரசனுக்குச் சிறந்த கடமையாகும். இம் மூன்று இடர்பாடுகளையும் போக்குவதற்கு முறையே வேந்தனுடைய கோலின் செம்மையும் குடையின் தன்மையும், வேலின் கொற்றமும் வேண்டும் என்பர். செங்கோல் கோடாதாயின், நாட்டில் வறுமை நேராதென்பதும், குடையின் தன்மை என்னும்அரசனது அருட்குணத்தால் பிணியின்றி மக்கள் வாழக்கூடும் என்பதும் வேலின் கொற்றமாகிய வீரமும் படைப்பலமும் சிறந்திருப்பின், பகைமை ஒழியும் என்பதும் கருத்து. இவ்வுண்மைகளைக் கம்பர் முறையே

'செம்மான் தனிக்கோல்
உலகேழிலுஞ் செல்லநின்றான்'

எனவும்,

'மண்ணிடையுயிர் தொறும் வளர்ந்து தேய்வின்றித் தண்ணிழல் பரப்பவும் இருளைத் தள்ளவும், அண்ணல் தன் குடைமதி அமையும்' எனவும், யாரோடும் பகை கொள்ளிலன் என்றபின், 'போரொடுங்கும் புகழொடுங்காது' எனவும் கூறி விளக்கியுள்ளார். அரசனைப் பற்றிக் கூறிய செய்திகள் இன்னும் பலவாகும். (தொடரும்)


## சைவ வித்தியாவிருத்திச் சங்கம்

மேற்படி சங்க ஆதரவில் உள்ள திருநெல்வேலிச் சைவ மகளிர் இல்லத்தில் இம்மாதம் 29-ந் திகதி தொடக்கம் தமிழ் ஆசிரியர் தராதரப்பத்திரப் பரீட்சைக்கும், ஆசிரிய கலாசாலைப் பிரவேச பரீட்சைக்கும், ஆயத்தஞ் செய்யும் மாணவிகளுக்கென வகுப்புகள் ஆரம்பமாகிநடைபெறும். மகளிர் இல்லத்து விடுதிச் சாலையில் மாணவிகள் தங்குவதற்கும் ஒழுங்கு செய்து கொடுக்கப்படும்.

வகுப்புகளிற் சேர விரும்புபவர்களும் விடுதிச் சாலையில் இடம்பெற விரும்புபவர்களும், திருநெல்வேலி முத்துத்தம்பி வித்தியாசாலைத் தலைமை ஆசிரியர் அவர்களுக்கு விண்ணப்பஞ் செய்யவும்.

பாடசாலைகளின்
முகாமைக்காரர்
சை. வி. வி. ச.

யாழ்ப்பாணம்
18-4-46 [2729]


## கண்டித் தமிழாசிரிய சங்கம்

சமீபத்திற் கூடிய கண்டித் தமிழாசிரிய சங்கத்திற் பின்வரும் தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றப்பெற்றன.

(1) சுயபாஷா ஆசிரிய தினமொன்று இலங்கை முழுவதிலும் ஏககாலத்தில் கொண்டாடவேண்டுமென்றும் அத்தினத்தன்று அரசாங்கசபை யங்கத்தவர் அவ்வவ் வட்டாரங்களில் சமூகமளிக்கச் செய்யவேண்டும் என்றும் இச்சபை கேட்டுக்கொள்கிறது.

(2) சுயபாஷா பாடசாலைகளில் மாத்திரம் 5-ம் வகுப்புமுடிய வகுப்புகளிருக்கவேண்டும் என்று கல்விமந்திரிசபையை இச்சபை கேட்டுக்கொள்கிறது.

(3) ஆங்கிலாசிரியர் சுயபாஷா ஆசிரியர் என்ற பேதமின்றி ஒரே சம்பளத் திட்டம் வரையறுக்கப்படவேண்டும் என்று சம்பள நிர்வாகசபையை இச்சங்கம் கேட்டுக்கொள்கிறது.

(4) இலவசக் கல்வித்திட்டத்தில் கூறப்பட்டபடி சுயபாஷைகளுக்குக் கொடுக்க வேண்டிய மதிப்பை நடைமுறையில் வித்தியாபகுதி யலட்சியம் செய்வதை இச்சபை பலமாகக் கண்டிக்கிறது.


## சித்தாதியை

### வாங்குவதா அல்லது வாங்க வேண்டாமா என்று ஆரம்பத்தில் பலர் தயங்கினர்

## இப்பொழுது

அநேகம்பேர் இம் மகா சஞ்சீவியைச் சாப்பிட்டுத் தங்கள் உடலிலுள்ள விஷக்கிருமிகளைப் போக்கி தங்கள் தேகத்திலுள்ள கிரந்திப் புண்கள் அரிப்பு, தடிப்பு, அரையாப்பு, கரப்பன், வாதரோகம், குஷ்டம், சொறி, சிரங்கு, பாண்டு, சோகை, காமாலை, உஷ்ண வாய்வு, பெண்களுக்குண்டாகும் சூதகக்கட்டு, சூதகவயிற்றுவலி இவைபோன்ற இன்னும் அகேவியாதிகளை ஒரேபாட்டில் சித்தாதியால் சுகப்படுத்தி இருக்கிறதற்கு அநேக நற்சாட்சிப் பத்திரங்கள் வந்து குவிகின்றன. உங்களில் யாராவது இம்மகா கொடிய பிணிகளால் கஷ்டப்படுகிறீர்களா? அப்படியானால் இம்மகா சஞ்சீவியை உடனே வாங்கிச் சாப்பிட்டு உங்கள் பிணியை அகற்றி சுகத்துடன் வாழுங்கள், சித்தாதி எல்லா ஊர்களிலும் நமது ஏஜென்சிகளிடம் குறிப்பிட்ட விலையில் பெற்றுக் கொள்ளலாம்

### விலை ரூபா 5-00 தபால் செலவு வேறு

கீழ்க்காணும் ஊர்களில் நமது ஏஜென்சிகளிடம் குறிப்பிட்ட விலையில் பெற்றுக்கொள்ளலாம்.

P. T. ராமகிர்ஷ்ண அன் கம்பெனி, அம்புகம ரோட். நாவலப்பிட்டி செல்வா ஸ்டோர்ஸ், 370 ஆஸ்பத்திரி ரோட் (ஸ்டேஷன் சந்தி) யாழ்ப்பாணம். ஜபறியா ஸ்ரோர்ஸ், நிர். 25A பிறவுண்றிக்வீதி, கண்டி. பாரதமாதா ஸ்ரோர்ஸ், நனுஓய, M. முத்தையாபிள்ளை மருந்து வியாபாரி நிர். 23 தெய்யோவிற்ற. அப்துல்காதர் நிர். 104 பம்பலப்பிட்டி V. கறுப்பையா அன்கம்பெனி நிர். 61, அப்புத்தளை. கறடோசா ஸ்ரோர்ஸ். நுவரெலியா, ஏஜென்ஸ் இல்லாத ஊர்களுக்கு ஏஜென்சுகள் தேவை. உடனே விபரத்திற்கு எழுதவும்.

### சிவானந்த சித்தர் வைத்தியசாலை

ஹெட் ஆபீஸ்: 92, செட்டியார் தெரு, கொழும்பு
பிராஞ்சு ஆபீஸ்: 768, லோவர் வீதி, வதுளை.

[2727]



## யாழ்ப்பாணம் ஐக்கிய லாப நிதி

### 1918-ம் ஆ ஸ்தாபிதமானது.

வங்கிக்காரர் மூலநிதி 8 லட்சம் ரூபா.

இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப்பணம்

ரூபா 34,36700. 100ரூபா விகிதமான 8000 பங்குகள்

**பங்குப்பணங் கட்டுமுறை :**
மாசமொன்று 1 ரூபா விகிதமாக 75 மாச காலத்திற்கு மாதந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக் கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்.

**தினசரிப் பற்று வரவு:**
எச்சநிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானால் ஒரு விகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்.

**தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப்பணம்:**
க்ஷேமப்பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னுங் காலங்கள் வரையறுத்து ஏற்படும் வட்டியும் முறையே 1.விகிதம், 2 விகிதம், 4 விகிதம், 6விகிதமாகக் கொடுக்கப்படும்.

**உண்டியல்கள்:**
கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்க விதமாகக் கொடுக்கப்படும்.
இந்தியா நோட்டு வட்டத்திற்கு மாற்றிக் கொடுக்கப்படும்.

**கடன்:**
நகைகள் ஈடுவைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். வட்டி 9 விகிதம் அறவிடப்படும். (ஈடுவைத்தவர்கள்) முதலையும் பாகம் பாகமாகக் கொடுக்கலாம்.
வேண்டிய விபரங்களை என்மூலம் அறிந்து கொள்ளலாம்.

S. கனகசபை
சிறாப்பர்

(2704)


இப்பத்திரிகை, யாழ்ப்பாணம்-மயிலிட்டிதெற்கு 'திருமகள் நிலையம்' நா. பொன்னையா அவர்களால், சுன்னாகம், திருமகள் அழுத்தகத்தில் 1946 ஏப்பிரல் 21உ ஞாயிற்றுக்கிழமைஅச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org